# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.



மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




புதிய மேலுறைகளுடன் இலங்கை முழுவதும் விற்பனையாகிறது



புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆவணி திங்கள் 7-ம் நாள் (23—8—1966) செவ்வாய்க்கிழமை ஐ:அவ் 6 | இதழ் 12


வட,-கிழக்கு

# ஒற்றுமையை பலப்படுத்துக

## வாலிபர்களுக்கு இராசதுரை வேண்டுகோள்



உரிமைப் போராட்ட காலத்தில் தமிழரசு வாலிப முன்னணியினர் காட்டிய வீரமும் உறுதியும், பாராட்டுக்குரியன. இன்று போராட்ட சூழ் நிலை மாறியுள்ளது. அதனால் தமிழ் பேசும் வாலிபர்களின் சக்தி தமிழ்ப்பிரதேசத்தின் பொருளாதார விருத்தியிலும். ஒற்றுமையை காப்பதிலும் செலுத்தப்பட வேண்டும். அமரர் வன்னியசிங்கம் கட்டியெழுப்பிய ஒற்றுமையை இந்துப் பல்கலைக் கழகம் என்று கூறிக்கொண்டு சிலர் தகர்த்தெறியப் பார்க்கிறார்கள். இவர்களின் தகிடுத்தத்தங்களை மக்களுக்கு அம்பலப் படுத்த வேண்டியது தமிழ்வாலிபர்களின் கடமையாகும். அத்துடன் எல்லாம் தமிழியக்கத்தை துரிதப்படுத்தவும் நமதுவாலிபர்கள் முன்வரவேண்டும்' என்று தமிழரசு வாலிப முன்னணிப் புதிய தலைவர் திரு. செ. இராசதுரை பா. உ. வாலிபமுன்னணியின் 11வது மாநாட்டையொட்டி சுதந்திரன் மூலம் விடுத்த விசேட செய்தியில் கூறியுள்ளார்.

அச் செய்தியில் மேலும் திரு. இராசதுரை கூறியிருப்பதாவது:

'தமிழ் மொழிச் சட்டம் சரியான முறையில் அமுல் நடாத்தப்பட வில்லையென்றால் அதற்கு முழுக்க முழுக்க அரசாங்கத்தையே குறை கூற முடியாது. தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும், தனித் தமிழிலேயே அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வது என்ற கொள்கையில் உறுதியுடனிருக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் தமிழிலேயே தங்கள் அலுவல்களை நடத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, எல்லாம் தமிழியக்கத்தை துரிதப்படுத்த தமிழ் பேசும் வாலிபர்கள் முன்வர வேண்டும்'



'தமிழ் அரசு வாலிபர்கள் தமிழரசுக்கட்சி நடாத்திய உரிமைப் போராட்டங்களின் போது காட்டிய உறுதியும், வீரமும் பாராட்டுக்குரியன. இன்று போராட்டச் சூழ்நிலை மாறியுள்ளது. அதனால் தமிழ் பேசும் வாலிபர்களின் சக்தி தமிழ் பிரதேசத்தின் பொருளாதார விருத்தியிலும், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் பணியிலும் செலுத்தப்பட வேண்டும்.

'அமரர் வன்னியசிங்கம் கட்டியெழுப்பிய தமிழ் பேசும் மக்களின் ஐக்கியக் கோட்டையை, 'இந்துப் பல்கலைக்கழகம்' என்று கூறிக் கொண்டு சிலர் தகர்க்கப் பார்க்கிறார்கள். அத்துடன் வடக்கு, கிழக்கு என்றும் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். இவர்களின் தகிடுதத்தங்களை மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டிய

(9-ம் பக்கம் பார்க்க)

வானொலி அலை நிலையம்

# இராசாங்க அமைச்சர் அடிக்கல் நாட்டுவார்

மாவிட்டபுரம் - ஆக. 20

ஒன்றரைக் கோடி ரூபா செலவில் வட பகுதியில் நிறுவப் படவிருக்கும் வானொலி அலை நிலையத்திற்கான அத்திவாரக்கல்லை நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கும் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நாட்டவிருக்கிறார். இக் கல் நாட்டு விழா கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பரந்தன் என்னும் இடத்தில் நடைபெறும். மேற்கு ஜெர்மன் அரசாங்க ஆதரவுடனேயே இந்த அலை நிலையம் அமைக்க ஏற்பாடாகியிருக்கிறது.

மேற்கு ஜேர்மன் உதவியுடன் எட்டரைக்கோடி ரூபா செலவில் இலங்கையில் நிறுவப்படவிருக்கும் எட்டு வானொலி அலைநிலையங்களில் ஒன்று வட பகுதியில் அமையவிருக்கிறது. இதற்கான அலை நிலையம் பரந்தனிலும், ஊட்டு நிலையம் (ருன்ஸ் மீட்டிங் ஸ்டேசன்) யாழ்ப்பாண நகரை அடுத்த மண்டை தீவிலும் நிறுவப்படும். அஞ்சல் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 22ம் திகதி நடைபெறும். யாழ்ப்பாணத்திற்கு நாளை வரவிருக்கும் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களே இந்நிலையத்திற்கான அடிக்கல்லையும் நாட்ட விருக்கிறார். இதற்கான ஒழுங்குகளை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் திரு. கா. பொ. இரத்தினம் பா.உ. ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு கொழும்பிலிருந்து பொறியியலாளர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று நேற்று முன்தினம் இங்கு வந்து சேர்ந்துள்ளது. ஒழுங்குகளைக் கவனிப்பதில் முன்னாள் வானொலி நிலைய மாஅதிகாரியாகக் கடமையாற்றிய இன்றைய யாழ் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த இப்போதைய வானொலி மாஅதிகாரி திரு.நெவில் ஜெயவீராவும் மும்மரமாக யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

# முத்தமிழ்க் காவலர் ஈழம் வருகிறார்

மாவிட்டபுரம் ஆக- 20



முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் 11வது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 23ம் திகதி காலை விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கிறார். அன்று பிற்பகல் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் இவர் உரை நிகழ்த்துவார். மாநாடு முடிவடைந்ததும் அவர் நேராக பலாலியிலிருந்து திருச்சி சென்றுவிடுவார் என்று தெரிகிறது.

திரு. விசுவாதம் அவர்கள் சிறந்த பேச்சாளர் மட்டு

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 29-8-66 காலை தலை நகரில் 28-8-66 மாலை கிடைக்கும்




# நீங்கள் கணக்குப் புலிதான்!!

24-7-66 ம் திகதி வளர்மதியில் வெளிவந்த கணிதப் போட்டிக்கான விடை!- சுந்தரம் வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் இருவர். போட்ட கதிரை ஒன்று. இத்துணுக்கை அனுப்பியவர் அனுராதபுரத்தைச் சேர்ந்த மருமகன் அ. ஜவகர்ஷா.

சரியான விடை அனுப்பிய மருமக்களின் பெயர்கள் வருமாறு!- அ. மு. றஜப்டீன் - எட்டியாந்தோட்டை, த. மதுபாலசிங்கம் - முள்ளியவளை, பி. சந்திரநாதன்-சாவகச்சேரி, சலாம் ஏ. கபூர் - பலாங்கொடை, சி. இ. குமுதநாயகி - அல்வாய், மூ. செபஸ்தியாம் பிள்ளை - யாழ்ப்பாணம், த. அருமைநாயகம் - மீசாலை, சா. அன்ரன். ஜயக்குமார் - கரவெட்டி, செல்வி ஜெயா. சபா - மல்லாகம், எம். ஏ. ரபூக், - மாகோ, செல்வி சு. மனோரஞ்சிதம் - பம்பலப்பிட்டி, ச. ஆனந்தராசா - அவிசாவலை, முகம்மது இபுருகீம் - குருநாகல், இந்திராணி இராசதுரை - மானிப்பாய், வெ. சிறுகுளஇலட்சியராஜன் - லூணுவத்தை, பிராங்க்நல்லையா -மருதானை ஞா. ஞானகுணாளன் -யாழ்ப்பாணம், மனோகரி மயில்வாகனம் - சுன்னாகம், ஞா. அமிர்தநாதன் - கொழும்பு - 10, எஸ். கந்தையா - அல்வாய், ச. கிருபாமூர்த்தி-சுன்னாகம்,. பொ இராமச்சந்திரன் - திருக்கேதீச்சரம், வி. கே. மூர்த்தி - மட்டக்களப்பு, தி. சுந்தரராசா - இளவாலை, புனிதவதி தில்லையம்பலம் - தொண்டமானாறு, செல்வி. றமிலாநெற்ஜி-யாழ்ப்பாணம், இ. கோபாலபிள்ளை - தேற்றுதீவு, ந. மகேந்திரஜோதி - திருகோணமலை, க. சுபத்திரா - வீமன்காமம், ஞா. சஞ்சயன் - யாழ்ப்பாணம்' ச. சுதர்சன் - பேசாலை, பி.சி. பி. ஞானதுரை - சுன்னாகம்' ஐ. நடராசா - வவுனியா, இ. சதானந்தன் - வவனிக்குளம் பொ. நாகேஸ்வரி - இளவாலை.

அடுத்த வாரம் புதிய போட்டியை எதிர்பாருங்கள்!

# தமிழில் பேசி நிற வெறியை முறியடித்த தமிழர்!

விதியை வென்ற வீரர்கள்: 3.

## பாக்கின்ஸன்

—நல்லை அமிழ்தன்—

1931-ம் ஆண்டு பாக்கின்சன் என்ற ரசாயன ஞானி வாழ்வில் ஓர் அதிசயம் நடந்தது. அவருடைய மனம் எவ்வாறு எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்துவது என்பதிலேயே முனைந்து நின்றது.

தான், ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளில் நின்றுகொண்டு மின்சாரக் கருவியால் இணைக்கப்பட்ட ஒரு புதுவிதமான விமானம் சுடும் பீரங்கியால் எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதாகக் கனவு கண்டார் எழுந்ததும் தாம் கனவில் கண்ட பீரங்கியின் படத்தைக் கடுதாசியில் வரைந்து மனமொன்றிய சிந்தனையில் ஆழ்ந்தார்.


அச்சிந்தனையில் மலர்ந்த மலர்தான் M 9. (எம். ஒன்பது) என்னும் விமானம் சுடும் அபூர்வ பீரங்கி. அந்தப் பீரங்கியின் உதவியால் எதிரி விமானங்கள் பசிபிக்கில் பறவைகள் சுடுவதை போல் சுட்டு வீழ்த்தப்பட்டன. கொண்ட கருமத்தில் கொஞ்சமேனும் இடைவிடாது அவர் மனம் ஈடுபட்டிருந்ததனால் தான் கனவிலும் அவருக்கு வெற்றி காட்சியளித்தது என்பதை மறந்திடாதீர்கள்.

அமெரிக்காவில் ஜியா ஜியா மாகாணத்தில் வேற்றுமை அதிகமாகப் பாராட்டுவார்கள். ஐ நா. பொதுச்சபைக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்ற 'ஹிதவாதா' பத்திரிகை ஆசிரியர் ஏ. டி. மணி அந்த மாகாணத்திலுள்ள 'அட்லாண்டா' நகருக்குப் போயிருந்தார். அப்போது தமக்கு ஏற்பட்ட அநுபவத்தை இங்கு கூறுகின்றார்.

'வெள்ளையர் ஹோட்டல்களில் கறுப்பர்களை அனுமதிக்க மாட்டார்களென்று முன்னலேயே எனக்கு சில பேர் எச்சரிக்கை செய்திருந்தார்கள். நான் 'அட்லாண்டா' நகருக்கு மாலை நேரத்தில் போயிருந்தேன். அங்கு எந்த ஹோட்டலுக்குச் சென்றாலும், 'வெள்ளையருக்கு மட்டும்' என்ற போர்டு வெளியே தொங்கவிட்டிருப்பதைக் கண்டேன். ஆகவே, அன்று இரவு பட்டினி கிடக்க நேரிட்டது. பசிக் கொடுமையால் என் மூளை தீவிரமாக வேலை செய்தது. ஒரு வழி கண்டுபிடித்தேன். மறுநாள் காலை வெள்ளையர் ஹோட்டலுக்குள் தைரியமாக நுழைந்தேன். எனக்கு ஏதாவது சாப்பிடத் தாருங்கள் என்று தமிழில் கேட்டேன்.

நான் சொன்னது எவருக்குமே புரியவில்லை. ஆகவே என்னை அயல் தேசக்காரர் என்று தெரிந்து கொண்டார்கள். என்னை வெளியே போகச் சொல்லாமல் எனக்கு வேண்டிய உணவைப் பரிமாறினார்கள். அந்த நகரில் அந்த ஹோட்டலிலேயே தங்கினேன்.

—அனுப்பியவர்:-
வி. கே. மூர்த்தி.



சிறு படகுகள், வள்ளங்கள், கட்டுவது பிரிட்டிஷ் மாணவர்களின் பொழுது போக்குகளில் ஒன்று. படகொன்றை புதிதாக அமைத்து தண்டவாளத்தில் வைத்து நதி ஒன்றை நோக்கி மாணவர் தள்ளிச் செல்வதை இதோ படத்தில் காண்க தென்கிழக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த கெண்ட் நகர பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் இவர்கள்.

# ஓடிப்போனவன்

.... நவசோதி ....

(4)

## அனாதைப் பிள்ளை

உடம்பை 'பண்டேஜ்' கட்டுகள் மறைகக செத்த பிணம் போலக் காட்சியளித்தாள் வசந்தனின் அன்னை. அந்த நிலையில் முதன் முதலாகத் தன் அம்மாவைக்கண்ட வசந்தன் 'அம்மா... அம்மா' என்று கட்டிலில் அழுதுபுரண்டான். மகனைக் கண்ட அன்னையும் கண்ணீர் வடிய அனுங்கி அனுங்கிக் கதைத்தாள்.

தீக்காயங்களால் ஏற்பட்ட வேதனை ஒரு புறம்; முறையாக மூச்சுவிட முடியாத நிலை மறுபுறம். அன்று காலை, ஆசையோடு அன்புமொழி பேசி அருகிலிருந்து ஒன்றாக உணவு உட்கொண்டு தன்னைக் கல்லூரிக்கு அன்னை அனுப்பிவைத்ததையும் இப்பொழுது அன்னை இருக்கும் கோலத்தையும் எண்ணும் போதும் வசந்தனுக்கு அடக்க முடியாத அழுகை பீறிட்டுக் கொண்டுவந்தது.

'அழாதை கண்ணே!' வசந்தனின் கரங்களை அன்பு வழியத்தடவிய அன்னை அவனைத் தேற்றினாள். விபத்தினைக் கேள்விப்பட்ட வசந்தனின் சித்தப்பாவும் சின்னம்மாவும் அங்கு வந்தனர்.

மூச்சு விட முடியாமலும் கதைக்க முடியாமலும் வேதனையைப் பொறுக்க முடியாமலும் அவள் துன்பப்படுவதைக் கண்ட அனைவரது உள்ளத்திலேயும் ஒரு பயம் குடிகொண்டது.

அருகில்வந்த சின்னம்மாவை நோக்கிய அன்னை 'நான் இன்னும் அதிக நேரம் உயிரோடு இருக்க மாட்டேன். வசந்தனை நீங்கள் தான் உங்கள் பிள்ளையைப் போல காப்பாற்ற வேண்டும்' என்று அவளின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கூறினாள்.

இதைக்கேட்ட வசந்தனுக்குப் பொங்கி வரும் அழுகையை அடக்க முடியவில்லை.

'வசந்தா! நீ அழாதை கண்ணே. நல்ல பிள்ளையெல்லே நீ. சித்தப்பா சின்னம்மா கூட நீ நல்ல பிள்ளையாக நடக்கனும்' மகனைத் தேற்றிய புத்திமதியும் கூறினாள்.

'அம்மா, நீங்க என்னம்மா சொல்றீங்க'

'நீ பயப்படாதை வசந்தா! நான் செத்துப் போனாலும்.'

'அம்மா அப்படிச் சொல்லாதிங்க அம்மா. நீங்க செத்தா... நானும்...' மகனின் வாயைப் பொத்தினாள் அவள்.

'நீ ஏன் கவலைப் படனும் வசந்தா. சித்தப்பாவும் சின்னம்மாவும் உன்னைச் சொந்தப் பிள்ளைபோல குறையில்லாமல்காப்பாற்றுவார்கள்.. அவர்களைப் பிரியாமல் .நீ நல்ல பிள்ளையாய் நடக்கனும். அவர்கள் தான் உனக்கு அம்மாவும் அப்பாவும்... வசந்தனின் கரங்களை இறுகிப் பிடித்துக்கொண்டே கூறினாள்.

அதற்குமேல் அவளால் பேசவும் முடியவில்லை. தொண்டையும் அடைத்துக் கொண்டது சிறிது நேரம் அமைதி நிலவியது. மகனைப் பிடித்திருந்த பிடி நெகிழ்த்து நின்றது. கண்களில் கண்ணீர் நிறைந்துநின்று பார்வையை மறைத்தது.

சித்தப்பாவும் ஆசிரியரும் கண்ணீரை அடக்கி சிலைபோல நின்றனர்.

சின்னம்மாவை நோக்கி வசந்தனின் வலது கையைப் பிடித்துத்தூக்கினாள் அன்னை. ஆனால் சின்னம்மா வசந்தனின் கையை ஏற்கும் முன்பாகவே பிடி தளர்ந்து வசந்தனின் அன்னையின் கண்களும் செருகி மூடி தலையும் சரிந்தது. 'அம்மா... அம்மா...' விக்கி அழுது அடியற்ற மரம் போல அன்னையின் உடல் மீது சாய்ந்தான் வசந்தன்.

கல்லும் கரையும்படி புழுப் போல துடித்துக் கதறினான் அவன். தன் கண்ணீரினால் தன்னைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த அன்னையின் உடலை நீராட்டினான். வெந்த உடலின் மீது குளிர்ந்த பாச வெள்ளம் பாய்ந்தோடியது.

'தாயிற் சிறந்த தொரு கோயிலும் இல்லை' மேன்மை மிக்க அந்தக் கோயிலை இழந்து விட்ட வசந்தன் நெற்றியிலே மாறி மாறி அடித்துக் கொண்டான். அனைவரும் அழுதனர்.

'அம்மா... அம்மா என்னை அனாதை ஆக்கிவிட்டுப் போயிட்டீங்களே அம்மா. இனி எனக்கு யாரம்மா இருக்கிறாங்க...' வசந்தனின் அழுகை ஒலி சுவர்களிலே மோதி ஒலித்தது. 'அழாதை வசந்தா...' தன் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிய வசந்தனைத் தேற்றினார் ஆசிரியர்.

கண்ணீர்விட்டு அழ அழ, மாணவர்களுக்கு அடிமேல் அடிபோடும் அவரின் ஆசிரிய இதயம் எப்பொழுதோ செத்து விட்டது.

'அம்மா... நான் அனாதையம்மா'

'அம்மா... நான் அனாதையம்மா'

'என்னை ஒருக்கா கண் திறந்து பாருங்கம்மா...'

'அம்மா... அம்மா...' — அன்னையின் உடலருகில் மயங்கி விழுந்தான் வசந்தன்.

தனக்கு ஏற்பட்டுள்ள கடல் போன்ற துன்பத்தையே உணராத உயிர் நிலையில் இருந்த வசந்தனை அணைத்துத் தூக்கினார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

அவர் அறியாமலே அவரின் சால்வை நிலத்தில் விழுந்து கிடந்தது.




மாணவர்களே! ஒரே மாதிரி உற்சாகத்துடன் விளையாடுங்கள்! வேலை செய்யுங்கள். வெறும் புத்தகப் புழுக்களாக ஆகிவிடாதீர்கள். படிப்பு-விளையாட்டு ஆகிய இரண்டிலிருந்தும் உங்களை அபிவிருத்தி செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும் அதை நன்றாகச் செய்யுங்கள்.

—நேரு

நாம் பணக்காரர்களாக இருக்கத் தேவையில்லை; ஆனால் ஒழுக்க முள்ளவர்களாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

—பெர்னாட்ஷா




கந்த-ஞானமுத்தன்,
கைதடி தெற்கு.

கே: எடுத்ததெற்கெல்லாம் தேசிய அரசாங்கம் தமிழரசுக் கட்சியை நாடுவதன் மர்மம் என்ன?

ப: அரசாங்க நடவடிக்கைகளுக்கு தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்புதேவைப் படுவதால்.

ஃ

'காப்பாளர்'
கிளிநொச்சி

கே: இக் காலப் பெண்கள் விலை கூடக் கொடுத்தும் நைலோன் ஆடைகளை வாங்கி அணிவதன் மர்மமென்ன?

ப: ஆடை அணிர்ததாகவும் இருத்தல் வேண்டும், அணியாததைப் போலவும் தெரிய வேண்டும். அதற்காகவே நைலோன்.

ஃ

பி. துரைராஜா,
கொட்டகலை

கே: இந்த நாடு என்றாவது ஒருநாள் கம்யூனிச நாடாகும் என்கிறேன். நீர் என்ன சொல்கிறீர்!

ப: கனவு காண வேண்டாமென்கிறேன்.

கே: மலை நாட்டின் எதிர் காலம் யார் கையில் இருக்கிறது?

ப: தோட்டத் தொழிலாளியின் கையில்.

ஃ

வே. பத்மநாதன்,
யாழ்ப்பாணம்

கே: அண்மையில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டிற்கு சென்றிருந்தேன். அப்பொழுது அங்கிருந்த சிலர் தங்களின் தலைவர் தமிழில் பேசும் போது கைதட்டி ஆரவாரம் செய்யவில்லை. அவர் ஆங்கிலத்தில் பேசும் பொழுது அமர்க்களமாக கைதட்டி உற்சாகப் படுத்தினர். ஏன்?

ப: தங்களின் தலைவர் ஆங்கிலத்தில் அதிக மோகம் கொண்டவர் என்ற இரகசியம் அவர்களுக்கும் தெரிந்திருக்கிறது.

இ. பத்மநாதன்,
ஒட்டுசுட்டான்

கே: தமிழரசார் இப்போ வட பகுதி மக்களைவிட கிழக்குப் பகுதி மக்களை அதிகம் கவனித்துக் கொள்ளுகின்றனர் என்று பொ. கட்சி மகாநாட்டில் ஒரு வார்த்தை கிளம்பியது. அப்படியாயின் பொ கட்சியின் நோக்கம் கிழக்குப் பகுதி மக்களை படுகுழியில் விழுத்துவதா?

ப: ஆம், வட பகுதி, மலை நாட்டு மக்களையும் சேர்த்து!

கே: எமது பிரதமர் திரு டட்லிசேனநாயக்கா தமிழரசுக் கட்சி சார்பாக வடக்கே மீண்டும் வருவாராம். உண்மையா?

ப: உண்மை தான். இன்னும் சில பாதங்களில் இது நடைபெறலாம்.

கே: வவுனியாவில் வந்து குடியேறுங்கள் யாழ் வாசிகளே என்று முழங்கும் வவுனியா எம். பி இங்கு காணிக் கச்சேரி நடக்கும்போது அவர்கள் வந்து குவிந்ததும், மௌனியாகி விடுகின்றாரே, காரணம் என்ன?

ப: யாழ்ப்பாணத்தில் அவர் அப்படிக் கூறினாலும், வவுனியாவுக்குத் திரும்பியவுடன் யாழ் அகற்றுச் சங்கத்தின் தலைவராகி விடுவது தான் காரணம்.

கே: உடுப்பிட்டி எம். பி. யின் குரல் மகாநாட்டில் ஒலிக்காதது பற்றி திரு. ஜீ. ஜீ. கவலையுடன் ஒரு வார்த்தைதானும் உடுப்பிட்டி மக்களுக்கு கூறவில்லையே!

ப: கடந்த பொதுத் தேர்தலின் போது உடுப்பிட்டி மக்கள் செய்த மாபெரும் தவறுக்கு இது தகுந்த தண்டனை!

ச. வேலாயுதம்,
யாழ்ப்பாணம்

கே: வவுனியா எம். பி. பத்திரிகைகளுக்கு விட்ட அறிக்கையொன்றில் 29-ம் ஷரத்தை அரசியற் சட்டத்தில் இடம்பெறச் செய்தவர் பொன்னம்பலம் தான் என்று குறிப்பிட்டிருந்தார். இது உண்மையா?

ப: பச்சைப் பொய்! அதனைச் செய்தவர்கள் வண. அதி மேற்றிராணியாரும் பெரிய சேனநாயக்காவுமாவர்.

ஃ

பெ. நடராஜா,
ஒவிலிக்கந்தை

கே: பள்ளி வாழ்க்கை முடிந்தும் சினிமாப் பார்ப்பதையே தொழிலாகக் கொண்டு திரியும் மாணவர்களை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் அவர்களுக்குத் தொழில் எதுவும் கிடைப்பதில்லை. எனவே. கலைஆர்வத்தால் இந்தக் கலைத் தொண்டைச் செய்கிறார்கள்.

ஃ

செ. மகேந்திரன்,
திருமலை

கே: காங்கிரஸ் மகாநாட்டில் தொண்டமான் பேசும் போது 'மலைநாட்டு மக்களின் இழிநிலைக்கு தமிழ்த் தலைவரின் அசட்டைதான் காரணமென்று குறிப்பிட்டார். அந்நேரம் ஆனைப்பந்தி தலைவரின் மனம் எப்படியிருந்திருக்கும்?

ப: தன்னைத் தான் குத்திக் காட்டுகிறாரோ என்று எண்ணியிருக்கும்.

ஃ

ஏ. எம். மவுறுப்தீன்,
கொழும்பு-13

கே: தமிழனை வாழ வைப்பது எது?

ப: அறிவும் துணிவும்.

கே: பிரச்சனைகளே இல்லாமல் ஒரு நாடு வாழ முடியாதா?

ப: முடியாது. பிரச்சினைகள் இல்லையேல் ஓர் அரசாங்கமே தேவைப்படாது.

ஃ

எஸ், தாசன்,
ஊர்காவற்றுறை

கே: யாழ்ப்பாணத்தில் நடந்தது தமிழ்காங்கிரஸ் மகாநாடா? தமிழரசுக் கட்சி எதிர்ப்பு மகாநாடா!

ப: தமிழரசை எதிர்ப்பதே த. காங்கிரஸின் கொள்கை. எனவே அதன் மாநாடு தமிழரசு-எதிர்ப்பு மாநாடாகவே இருக்க முடியும்.

ஃ

பி. இராசதுரை,
ஊர்காவற்றுறை

கே: தமிழரசுக் கட்சியினர் ஒற்றையாட்சித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டனரென்று தமிழ் காங்கிரஸார் கூறுகின்றனரே!

ப: வாய்க்கு வந்ததைக் கூறி வம்பளக்காமல் கல்முனை மாநாட்டுத் தீர்மானங்களைப் பார்க்கட்டும்!

ஃ

வே. தர்மலிங்கம்,
நல்லூர்

கே: தென்னிந்தியத் தமிழர்களோ, தலைவர்களோ, தங்களின் ஈழத்து விசயத்தின் போது தந்தை செல்வாவுடன் அளவளாவி அவர் ஆசியைப் பெற்றுச் செல்ல தவறுவதே இல்லை. ஆனால் தனிப் பெருந் தலைவரிடம்' அவர்கள் ஆசிர்வாதம் பெறுவதுமில்லை, அதை விரும்புவதுமில்லை. ஏன்?

ப: தமிழ் பேசும் மக்களின் தலைவர் தமிழரசுத் தந்தை செல்வநாயகமே என்பதை தமிழ் நாடும் அறியும். எனவே அங்கிருந்து வரும் கலைஞர்களும் தலைவர்களும் அவரைக் கண்டு ஆசி பெறுகின்றனர். திரு. பொ. பற்றி தமிழ் நாடு அறியாது. அறியக் கூடியதாக அவர் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகப் போராடவில்லையே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-13.

● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.



'சி'யால் முடியாது!

திரு. க. கா. பொன்னம்பலம் மீண்டும் பொ. கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

—செய்தி.

பொ. கட்சிக்கு பொ. தான் தலைவர். ஒரு சி எப்படித் தலைவராக முடியும்?

கடலை ஞானம்!

வட மாகாண வாலிபர்கள் எனது தொகுதியில் வந்து ஏராளமாகக் குடியேற வேண்டும்.

—யாழ்ப்பாணத்தில்,
வவுனியா எம். பி.

—யாழ் அகற்றுச் சங்கத் தலைவருக்கு யாழ்ப்பாணத்தில் உதயமாகியிருக்கும் இந்தக் கடலை ஞானம, வவுனியா வந்திறங்கியதும் போய்விட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

பகற் கனவு

தமிழரசுக் கட்சி வட பகுதியைக் காட்டிலும் கிழக்கு மாகாணத்தில்தான் அதிக கவனம் செலுத்துகிறது.

—பொ. கட்சி பிரமுகர்.

வெந்ததை தின்று வாயில் வந்ததைப் பேசும் இப்பிரகிருதிகள், வடக்கு, கிழக்கு என்று மீண்டும் மக்களைப் பிரித்து அரசியல் லாபம் காண கனவு காண்கிறார்கள்.

பாவம் பாரிஸ்டர்!

தமிழரசுக் கட்சி சிங்கள மக்களிடமிருந்து பிரிந்து சென்று தனியரசு அமைக்க வேண்டும் என்ற கொள்கையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

—பொ. கட்சிப் 'பாரிஸ்டர்'

சாவகச்சேரி மக்கள் புத்திசாலிகள்தான்! சமஷ்டிக்கும் பிரிவினைக்கும் பேதம் தெரியாத இந்த 'பாரிஸ்டரின் அறிவுக்கூர்மையை அறிந்தோ என்னவோ அன்றே தலையில் அடித்து உட்கார வைத்துவிட்டார்கள்!

"குஞ்சுக்கு" தெரியுமா?

கல்முனை மாநாட்டில் சிங்கக் கொடியை பறக்க விட்டது ஏன்?

—ஒரு பொ. கட்சிக் 'குஞ்சு'

கல்முனையில் நடைபெற்ற தமிழரசாரின் மாநாட்டில் 'தேசியக்கொடி பறக்கவிடப்படவில்லையென்று செனட்சபையில் செனட்டர் பொறிக் டீ சூசா சமீபத்தில் கூறியிருப்பது இதுகளுக்கு எங்கே விளங்கப் போகிறது?

பலே! பேஷ்!!

பொ. கட்சி மாதர் கூட்டத்தில், ஆங்கில நடனமும் இடம் பெற்றது.

—செய்தி.

தமிழ் பண்பாட்டையும் இந்து சமயத்தையும் வளர்க்கவா ஆங்கில நடனம்? பலே பேஷ், பொ. கட்சியினரே!






பிளக்கும் தலைவலி, பல்வலி, தடிமல், காய்ச்சல், உடல்வலி, மாதவிடாய் முதலியவற்றால் அவஸ்தைப்படும்போது டிஸ்பிரினை பாவியுங்கள். டிஸ்பிரின் வேதனையைத் தணித்து உடன் நிவாரணமளிக்கும்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபார்சு செய்கிறார்கள்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். வில்லையை விழுங்கி விடலாம் அல்லது தண்ணீரில் கரைத்துக் குடிக்கலாம்.




றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

JWT R.C.104

● சுதந்திரத் தியாகி ● முஸ்லிம்களின் ஒளி விளக்கு ● அரசியல் மேதை

# தமிழின் புகழ் பாடும் தன்னிகரில்லா முஸ்லிம் பெருந் தலைவர் காயிதே மில்லத்

'உலக நாடுகளிலே மிகப் பழமை வாய்ந்தது திராவிட நாடு; ஆதிமனிதன் தோன்றிய நாடு திராவிட நாடு. உலக நாகரீகங்களிலேயே மிகத் தொன்மை வாய்ந்தது திராவிட நாகரீகம் அது மட்டுமல்ல. உலக மொழிகளிலும் மிக மிகப் புராதனமானது திராவிடத்தின் சிறப்பு மொழியான தமிழ் மொழி.' இப்படி ஒரு ஆணித்தரமான கருத்தை வெளியிட்ட பெருமை தற்போது ஈழத்தே தங்கியுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களுக்கே உரியதாகும். அன்னாரின் தமிழ் மொழிப் பற்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே ஒரு கிளர்ச்சியையும்—தமிழ் எங்கள் உயிர் என்னும் உணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதென்று தான் கூற வேண்டும்.

அன்றொரு நாள்,

### தமிழுக்காயெழுந்த ஒரு குரல்

இந்திய நாட்டின் அரசகரும மொழியாக எம் மொழியைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்சினை சட்டசபையிலே வெகு சர்ச்சைக்குள்ளான சமயம் அது. சபையிலே பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது அல்ஹாஜ் காயிதேமில்லத் அவர்களுக்கு. எழுந்தார்; தமிழுக்காக ஒரு வீர உரை நிகழ்த்தினார். 'இந்த நாட்டிலே பழமை வாய்ந்த, இலக்கியச் செல்வம் சிறந்த, ஆற்றல் மிக்க ஒரு மொழியை இந்த நாட்டின் அரசகரும மொழியாக்க வேண்டுமென ஆட்சி மன்றம் விரும்பினால் அதற்கு முற்றிலும் பொருத்தமானது தமிழ் மொழி ஒன்றே' 'இதை ஓர் தமிழ் மகன் கூறவில்லை, ஒரு இஸ்லாமியன் தன் தாய்மொழி மீதும், பண்டைய மொழி மீதும், கொண்ட பற்றினால் தனிக் குரலாக முழங்கினார் என்றால் அவரை அவரது மொழிப்பற்றை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகுமன்றோ!

### ஆரம்ப வாழ்வு

தென்கத்தின் நெல்லையை அடுத்துள்ள பேட்டையம் பகுதியிலே 1895ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி நல்லதோர் குடும்பத்திலே அன்னார் பிறந்தார். தந்தை பெயர் மியாகான், என்பதாகும். ஜனாப் மியாகான் அவர்கள் பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற ஒருவர். தமிழ், அறபி, உர்து, பார்ஸி சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. திருவாங்கூர் அரசகுடும்பத்தினருக்கு



உடைவகைகள் வழங்கும் பிரபல வியாபாரியாகவும் அன்னார் விளங்கினார். தன் மைந்தன் இஸ்மாயில் ஐந்து வயதுப் பாலகராயிருக்கையிலேயே புனித மரணமடைந்து விட்டார்.

### கல்வி

திருநெல்வேலி ஸி. எம். எஸ். உயர் நிலைப் பள்ளியிலும் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்ற ஜனாப் இஸ்மாயில்சாகிப் அவர்கள் சகலவற்றிலும் சிறந்த ஒரு மாணவனைத் திகழ்ந்தார். கல்லூரிப் போட்டிகளில் சகல பரிசில்களும் இவரையே வந்தடைந்து விடுமென்றால் இவரது திறமைதான் என்னே; 1920ம் ஆண்டில் சர்வகலாசாலைப் பட்டதாரிப் பட்டம் இவரை வந்தடைவதற்கு இருமாதகால முன்பே மகாத்மா காந்தி தலைமையில் நாட்டில் கிளர்ந்தெழுந்த ஒத்துழையாமை இயக்கம் இவரைத்தன் பக்கத்தே இழுத்துக் கொண்டது. ஒத்துழையாமை இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுப்பதற்கு மூலகர்த்தா ஜனாப் முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களே! சுதந்திரதாகம் பட்டத்தைவிட சட்டமறுப்பு இயக்கத்தை விரும்பியதென்றால் அன்னாரின் அரசியல் பற்றுணர்ச்சியை என்னென்பது;

### தொழில்

சென்னையில் தோல் பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பிரபல கம்பெனி ஒன்றின் முக்கிய பதவி வகித்த ஜனாப் இஸ்மாயில் சாகிப் பங்காளியாக மாறியதுடன் மற்றப் பங்காளியின் இருப்புதல்வியையே தாரத் துணைவியாகவும் கொண்டார்.

### அரசியல் பிரவேசம்

1946ம் ஆண்டிலே பொதுத் தேர்தலில் நேரடியாக ஈடுபட்டார் சென்னை சட்டசபைக்கு நேரடியாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை தேச நலமே தன் நலம், என்ற கொள்

## நிந்தவூர் ஏ. எல் எம். அமீன்

கைக்காக இடையறாது பாடுபட்டு வருகின்றார். 1962ம் ஆண்டிலே தாம் போட்டியிட்ட தொகுதிக்கு விஜயம் செய்து தேர்தல் வேலைகளில் ஈடுபடாது வெற்றி பெற்ற பெருமை இவருக்கே உரியதாகும். கேரள ராஜ்ய மஞ்சேரி தொகுதி வாக்காளர்கள் இப் பெருமையை ஜனாப் இஸ்மாயில்சாகிப் அவர்களுக்கு வழங்கினர்கள்.

### பாராட்டு

சென்னை முதலமைச்சர்களாயினும்சரி, வேறு எவராயினும் சரி ஜனாப் இஸ்மாயில சாகிப் அவர்களின் தலைமையாற்றலையும்,விவாதத் திறமையையும், சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவராயிருந்து சேவையாற்றிய போதும் பாராட்டவும், புகழ்மாலைகள் சூட்டவும், முன்னின்றார்கள் என்றால் அவரின் சேவையை நாம் பாராட்டாதிருக்க முடியுமா?

### முஸ்லிம் லீக்

உலக அரசியல் வரலாற்றிலே மிகுந்த சோதனைக்குள்ளான ஓர் அரசியல் கட்சி அகில இந்திய முஸ்லிம் லீக் என்று தான் கூற வேண்டும் இந்திய யூனியனில் பிரிவினையால் எஞ்சிய நாலரைக் கோடி முஸ்லிம்களும் தளர்ந்திருந்த கட்டத்தில் அம் மக்களின் நம்பிக்கையின் சின்னமாக உலவிய ஒரே உருவம் இன்று எழுபத்தி ஒரு வயதை எட்டிப் பிடித்திருக்கும் ஜனாப் முகம்மது இஸ்மாயில் சஹிப் அவர்களே. ஏற்பட்ட எத்தனையோ சோதனைகளை யெல்லாம் தாங்கி சமுதாயம் தலை நிமிர்ந்து நடக்க வழி செய்த பெருமை இவருக்கே உரியதாகும்.

மொழிப்பற்று, தேசப் பற்று, மதப் பற்று, என்பன ஒருங்கே கொண்டிருந்தார் இப் பெரியார் சீன—இந்திய, பாக்—இந்திய மோதல்களின் சமயம் திறம்மிகுந்த பல அறிக்கைகளை வெளியிட்டு பக்கலைத் தட்டி யெழுப்பினர். உண்மை முஸ்லிமான இவர் இந்திய முஸ்லிம்களின் நலனுக்காக, அவர்களின் உரிமைகளுக்காகப் போராடி வருவது இலங்கை முஸ்லிம் தலைவர்களுக்கு ஓர் முன்னோடியாகும். ஈழத்தின் கண்ணே அவர் வந்த போது பத்திரிகை நிருபர் ஒருவரிடம் தமது கருத்தைப் பின்வருமாறு தெரிவித்தார் 'ஒரு நாட்டிலே வாழும் சிறு பான்மையினர் கட்டுக் கோப்பாக ஒரே கொடியின் கீழிருந்து செயலாற்ற வேண்டும். அப்போதுதான் தம் உரிமைகளைப் பெற இலகுவாகும்' என்றார். அன்னாரின் கருத்து இன்று இலங்கையிலே கட்டுக் கோப்பில்லாது பிரிந்து வாழும் முஸ்லிம்களும், முஸ்லிம் தலைவர்களுக்கும் அவர் விடுத்த ஓர் அன்புக் கட்டளை யென்று தான் கருதவேண்டியுள்ளது.

### அரசியல் மேதை

தியாகச் செம்மல் திரு காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களை ஒரு வலிமை மிகுந்தவனவான். இஸ்லாத்தின் விளக்கு. அவரை அரசியற் தலைவர் என்று அழைப்பதைவிட அரசியல் மேதை என்று அழைக்கலாம். இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

---

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி

# தமிழரசுத் தலைவர்களின் பயிற்சி முகாம்

வாலிப இயக்கங்களே பல நாட்டின் தலைவிதியை நிர்ணயித்துள்ளன. உலக நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அசைபோட்டுப் பார்க்கும்பொழுது வாலிப இயக்கங்கள் தனித்துநின்றும், வேறு இயக்கங்களுடன் சார்ந்து நின்றும் நடாத்திய போராட்டங்கள் வரலாற்று நூல்களின் பல பக்கங்களை நிரப்பியிருப்பதை நாம் காண முடியும்.

இத்தாலி நாட்டின் விடுதலை வரலாற்றில், இளம் இத்தாலியர் இயக்கத்தின் பணி தனித்துவம் பெற்று நிற்கிறது அயர்லாந்து நாட்டின் நீண்ட விடுதலைப் போராட்டப் பாதையில் ஓ கொனலின் 'இளம் அயர்லாந்து' இயக்கம் பல குறிப்பிடக்கூடிய சாதனைகளை ஆற்றியிருக்கிறது. அதேபோன்று 'இளம் துருக்கியர்' இயக்கத்தின் பணியும் பெருமையுடன் குறிப்பிடக்கூடியதாகும். இலங்கையின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில்கூட இளைஞர் இயக்கத்திற்கு பங்கு இருக்கிறது. அன்று செயல்பட்ட 'இளைஞர் காங்கிரஸ்' இந்த வகையில் முக்கியத்துவம் பெறுகிறது.

**பூங்குன்றன்**

இளைஞர் இயக்கங்கள் விடுதலைப் போராட்டத்தின் இரத்த நாளங்கள். பெரியவர்கள் கூடிப் போடும் திட்டங்களைச் செயலில் காட்டுபவர்கள் அவர்களே. இந்த வகையில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளை மீட்க நடாத்திவரும் அறப்போராட்டத்தில் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியும் குறிப்பிடக்கூடியளவு தன் பங்கை ஆற்றியிருக்கிறது. 1952-ம் ஆண்டு தைத்திங்கள் முதலாம் நாளன்று உதயமான இவ்விளைஞர் இயக்கம் தனது பதினைந்தாண்டு காலத்துள் களம்பல கண்டு விட்டது. ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறது. பொலீசாரின் குண்டாந்தடிக்கு இவ்வியக்கத்தின் இளைஞர் பட்டாளம் பல முறை ஆட்பட்டிருக்கிறது ஆளவந்தாரின் இரகசியக் கண்காணிப்பு இவ்வியக்க முன்னணியினர் மீது பல ஆண்டு காலம் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கிறது.

### முதற் போராட்டம்

தமிழரசுப் பெருந் தலைவர்களை நேரடியாகக் களத்திற்கு இழுத்துவந்த பெருமை தமிழரசு வாலிப முன்னணியையே சாரும். இத்தனைக்கும் மேலாக தமிழரசுக் கட்சி என்ற அப்பேரியக்கத்தின் தலைவர்களில் பலருக்கு இவ்விளைஞர் இயக்கமே பயிற்சி முகாமாக இருந்திருக்கிறது — இருந்துவருகிறது.

1952-ம் ஆண்டு ஆரம்பமான வாலிப முன்னணி சரியாக இரண்டாண்டுக்குள் போராட்டக் களத்

(5-ம் பக்கம் பார்க்க)

★ மாணவ ஆசிரியர்
★ சிறுப்பர் சேவை
★ பொதுச் சௌக்கிய பயில்வோர்

**தெரிவுப்பரீட்சை - அக்டோபர் 1966**

மேற்படி பரீட்சைக்கென்றே தயாரிக்கப் பட்டுள்ள பயிற்சி கோவைகள்

★ தமிழ் பாஷை — ரூ 5/-
★ பொது அறிவு — ரூ 5/-
★ பொது விவேகம் — ரூ 5/-

சிறந்த முறையில் பரீட்சையில் சித்தியடைய எமது பயிற்சி கோவைகள் துணை செய்யும்.

கையிருப்பு முடியுமுன் உடனே பணத்தை போஸ்டல் ஓடர் செய்து அனுப்பவும்.

அதிபர்
சர்வகலாசாலை போதனு கழகம்
540, மருதானை வீதி, த. பெ. இல. 1079
கொழும்பு-10

# மாவட்டசபை நிறுவினால் கிழக்கிலங்கை தமிழ் ராஜ்யமாகுமாம்

சிங்கள இனமும், பௌத்த சமயமும் இந்நாட்டில் சந்திர சூரியர் இருக்கும் வரை நீடித்து நிலைக்க வேண்டுமானல் உள்ளூராட்சி மன்றப் பிரிவினைகள் செய்யவோ மாவட்ட சபைகளை நிறுவி கிழக்குமாகாணத்தைத் தமிழ் ராஜ்யமாக்கவோ வேண்டாமென்றுகோரி சேருவில மங்கல ரஜமகா விகாரை அதிபதி வண. தபபகஸ் ஆரே ஸ்ரீ சுமேதங்கர நாயக்க தேரோ பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சேருவில நாயக்க தேரோ கூற்று

சிங்களவர்களின் ஆதிக்கம் நிலவும் கந்தளே, பெனிகேட்டியா, மொள்ளிப்பத்தனே, அக்போபுரம், தெகிவத்தை, சேருவில முதலிய உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் மாற்றி அமைத்தோ, முஸ்லீம் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைத்தோ சிங்களவர்களின் ஆதிக்கத்தை அழிக்க தமிழரசு வாதிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக அந்தப் பிரதேசங்களில் தமிழ், முஸ்லீம் மக்களே பகிரங்கமாகக் கூறி வருகின்றனர் என்றும் நாயக்கதேரோ தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ சுமேதங்கர தேரோ மேலும் குறிப்பிடுவதாவது:- கிழக்கு மாகாணத்தில் காட்டுப் பகுதிகளில் வசிக்கும் சிங்களவர்களையும் தாழ்ந்த பிரதேசத்திலிருந்து இங்கு வந்துள்ள சிங்களவர்களையும், சேர்த்துக் கணக்கெடுத்தால் மாகாணத்தின் முழுச் சனத்தொகையில் 55%பேர் சிங்களவர்களாவர்.

ஆனால், தமிழ் முஸ்லிம் அதிகாரிகள் சிங்களவர்களைப் பதிவு செய்யாததால், இந்தப் பழம் பெரும் சிங்கள இராசதானியைத் தமிழ்ப் பிரதேசமாக-தமிழ்ப்பேசும் பிரதேசமாக மாற்றிவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக நான் அறிகிறேன். இனத்தத்துவ நிறத்துப்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களிடம் மட்டுமே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.'

## தமிழின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தபக்களிக்கும் மட்டற்ற வரவேற்புக்களில் அன்னார் பெருமையுடன் கூறுவது இதைத்தான்

தமிழ் மொழி இந்துக்களுக்கு மட்டும் உரித்தான மொழியல்ல. அதைத் தாய்மொழியாகக் கொண்ட பௌத்தர்களும், முஸ்லிம்களும், ஜைனர்களும், கிறிஸ்தவர்களும், இருக்கின்றார்கள். தமிழ்தழைக்க இவர்களும் உதவியுள்ளார்கள். உலகின்கண்மிகப் பழமையான மொழி தமிழ் மொழிதான் எத்தனையோ. இன்னல்கள் நேர்ந்தாலும் இனிமையும் பெருமையும் குறையாத மொழி என்னுடைய தாய் மொழியான தமிழ் மொழியே! தமிழ் என்னுடைய மொழி என்று சொல்வதில் தான் பெரியார் எவ்வளவு உரிமை பாராட்டுகின்றார்கள். இவர் அடையும் பெருமை தமிழ் பேசும் ஒவ்வொரு மகனும் அடைந்தால் என்ன?

பெரியாருடன் இங்கு வருகை தந்துள்ள மணிவிளக்கு ஆசிரியரும் சென்னை மாவட்ட முஸ்லிம் லீக் தலைவரும் பாரத ராஜ்ய சபை உறுப்பினருமான ஜனப் ஏ. கே. ஏ அப்துஸ்ஸமது அவர்கள் ஒரு சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமாவர். எழுத்தின் வாயிலாக இஸ்லாத்திற்கு அவர் நீண்ட காலமாக ஆற்றிவரும் தொண்டு ஒவ்வொரு முஸ்லீமாலும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்

## தமிழரசுத் தலைவர்களின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் குதித்தது. முதல் முழக்கம் மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் எழுந்தது. அதுவும் மொழிக்காக மொழியின் மானம் காக்க. மட்டக்களப்பு — கல்முனை வீதியில் நடைபெற்றிருந்த தமிழ் ஒழிப்பை ஒழித்து தமிழுக்கு உரியஇடம் கொடுக்கவே வாலிபர் முழக்கம் இட்டனர். தாளங்குடாப் பெயர்ப் பலகையில் தமிழுக்கு இடங் கொடுக்க மறுத்தது அல்லது மறந்து விட்டது அன்றைய அரசு. தமிழரசு வாலிபர் அணி திரண்டு சென்று அப்பெயர் பலகையில் தமிழை நிலைநாட்டினார்கள்.

### சாதனை

தமிழ் எழுதித் தகைளை பெற்ற தாளங்குடாப் போராட்டத்தை அடுத்து அதே ஆண்டில் யாழ்ப்பாணம் வந்த அன்றைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டத் தீர்மானித்தனர் தமிழரசு வாலிபர்கள். அமைச்சர் பதவியை இழந்து யாழ்ப்பாணத்தில் வந்து ஒதுங்கியிருந்த யாழ்ப்பாணப் பிரதிநிதியும் கொத்தலாவலை வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் கறுப்புக்கொடி காட்ட வேண்டும் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டார். ஆனல், யாழ்ப்பாணப் பிரதிநிதியோ கொத்தலாவலையைக் கண்டதும் தொடை நடுங்கித் தமது திட்டத்தை இரகசியமாகக் கைவிட்டுவிட்டார் செயலில் காட்டியவர்கள் தமிழரசு வாலிபர்களே. இதைத்தொடர்ந்து நடைபெற்ற சகல போராட்டங்களிலும் தமிழரசு வலிபர் முன்னணி முன்னணியிலேயே நின்று இருக்கிறது.

### என்ன செய்ய வேண்டும்?

காலிமுகப் போரட்டத்திலும் சரி, திருமலை யாத்திரையிலும் சரி சிறீ எதிர்ப்புப் போராட்டத்திலும் சரி, 1961-ம் ஆண்டு அறப்போராட்டத்திலும் சரி தமிழரசு வாலிப முன்னணியின் பங்கும் பணியும் பெரிதாகும். சிறீயை எதிர்த்துச் சிறையை நிரப்பியவர்களில் பெருந்தொகையினர் தமிழரசு வாலிப முன்னணியினரே;

இன்று படைக் கருவிகள் கீழே வைக்கப்பட்டிருக்கின்றன. போர்வீரர்களுக்குச் சற்று ஓய்வு கிடைத்திருக்கிறது. கீழே வைக்கப்பட்டிருக்கும் படைக்கருவிகள் துருப்பிடித்துவிடாது இருக்கின்றனவா என்றும் இடையிடையே பார்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன் மட்டும் நின்றுவிட்டால் பணி முடிந்துவிடாது. நமது பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் வாலிபர்கள் கவனம் செலுத்த வேண்டும். இன்று கூடும் தமிழரசு வாலிபர்களின் மாநாடு இதற்கான திட்டங்களைத் தயாரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளவேண்டும்.

### மாவட்ட சபை எதிர்ப்பு

'மாவட்ட சபை மசோதாவைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றி அவற்றை பிரதமருக்கும்' எம். பிகளுக்கும் அனுப்புமாறு கிராமக் கமிட்டித் தலைவர்கள் எல்லோரையும் சேருவல மங்கள ரஜ மகா விகாரை அதிபதி கிழக்கு-தமன்கடு பிரதேச தலைமைச சங்க நாயக்க வண. தபபகஸ் ஆரே ஸ்ரீ சுமேதங்கார நாயக்க தேரோ கேட்டுக்கொண்டுள்ளார்".

—எத்த (17-8-66)

## சிங்கள இதழ்களில்...

### பிரிவனு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு முஸ்லிம் அல்லது கிறிஸ்தவர் நியமிக்கப்படலாம்

#### கல்வி மசோதா பற்றி ஜனதின

'கல்வி மந்திரி இரியகொல்லேயின் உயர்தரக் கல்வி மசோதாவில் வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக் கழகங்களில் உபவேந்தர்கள் பௌத்த பிக்குகளாக இருக்க வேண்டுமென்று ஏற்கனவே இருந்து வரும் நியதி மாற்றப்பட்டுள்ளது. அதனுல் எதிர் காலத்தில் ஒரு கிருஸ்தவரோ ஒரு முஸ்லிமோ இப்பல்கலைக் கழகங்களின் உபவேந்தராக வர முடியும்' என்று ஜனதின (16-8-66) ஒரு செய்தி வெளியிட்டுளது.

இச் செய்திபில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—
புதிய மசோதாவின் 97-வது சரத்தின்படி, 1958 பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் சட்டமாக்கப்பட்ட வித்தியோதய, வித்யாலங்கார பல்கலைக் கழகச்சட்டம் அடுத்த செப்டம்பர் 30-ந் திகதி ரத்துச் செய்யப்பட்டுவிடும்.

அத்துடன் புதிய மசோதாவின்படி வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் வண. பண்டித கிரிவத்துடுவே ஸ்ரீ பிரக்ஞாசார நாயக்க தேரோவினதும், வித்தியோதய பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் வண. டாக்டர் பரவாஹர ஞானக்ஞான நாயக்கதேரோவினதும் பதவிகளும் அன்றே ரத்தாகிவிடும்;

சமயத்துக்கும், கல்விக்கும் அவர்கள் செய்யும் சேவையை முன்னிட்டுதான் பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் பிக்குகள் உபவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டனர்'.

### ஆங்கிலத்தில் அலுவல்கள்


'ஏழு கட்சி கூட்டரசாங்கப் பதவிக்கு வந்த பின்னர், அரசாங்க அலுவல்கள் ஆங்கிலத்தில் எவ்வளவு விரிவாக நடைபெறுகிறதென்பதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமென்றால் உயர்தர அதிகாரிகள் காட்டியிருக்கும் எதிர்ப்பு ஒன்றே போதுமானதாகும். ஒவ்வொரு திணைக் களத்தின் அலுவல்களும் திடீரென ஆங்கிலத்துக்கு மாறிவிட்டதால், பிராந்திய அதிகாரிகள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'தனக்கு அனுப்பப்படும் எல்லா சுற்று நிருபங்களையும் சிங்களத்தில் அனுப்பும்படி குருணகல் கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனர் விவசாயச் சேவை கமிஷனரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

—ஜனசத்திய (15-8-66)


ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.


# ஒரு மொழிக் கோஷம் நாட்டை— இரண்டு படுத்தி விடும்

## வகுப்பு வெறியர்களுக்கு கோப்பாய் பிரதிநிதி எச்சரிக்கை

“இந்த நாட்டு முன்னேற்றத்திற்கு அறிவியல் கல்வி மக்களுக்கு மிக மிக அவசியமானது. விஞ்ஞானமாயினும் கைத்தொழிலாயினும் வளரவேண்டுமென்றால் அறிவியல் கல்வி முறையில் நாம் அபிவிருத்தி செய்தேயாகவேண்டும். நாட்டு முன்னேற்றம் பற்றி அனைவரும் திட்டமிடுகையில் சிலர் ஒரு மொழிக் கோரிக்கையை முன்வைக்கிறார்கள். ஒருமொழியால் ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது. அது, மாறாக வேற்றுமைக்கே வழிவகுக்கும் என்பதை இங்கு தெளிவுபடுத்திக் கூறிவைக்கிறேன்.” கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளை வரவு—செலவு உரைமீது பாராளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

திரு. கதிரவேற்பிள்ளையின் முழுப் பேச்சின் விபரம் வருமாறு:

“இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்படியொரு நிதானமான, நல்ல வரவு செலவுத் திட்டத்தை அமைக்கக் கூடியதாக இருப்பதற்குக்காரணம் நாட்டிலே முக்கியமான தொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டமைதான். இந்த நாட்டிலே இன ஒற்றுமையும், தேசிய ஒற்றுமையும், நல்லெண்ணமும் உருவாக்கப்பட்டதனாலேதான் இப்படிப்பட்ட நிதானமான, நல்ல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைந்த வரவு செலவுத்திட்டமொன்றை உருவாக்கக் கூடியதாக இருந்தது. இப்படியான ஒரு சூழ்நிலையைக் கடந்த வருடத்திலே ஏற்படுத்தியமைக்காக எங்களது கௌரவ பிரதமருக்கு நாடு முழுவதுமே கடமைப்பட்டதாக இருக்கிறது. நல்லதொரு சூழ்நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது என்பதற்கு முக்கியமாக ஒன்றைக் குறிப்பிடலாம். சென்ற வருடம் முழுவதும் மசால வடை என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டு இயங்கிய எதிர்க்கட்சி நண்பர்கள் இப்பொழுது அந்தப் போக்கைக் கைவிட்டுவிட்டார்கள். ஏனென்றால் நாட்டில் அதற்கு ஆதரவு இல்லை. இந்தச் சுமுகமான சூழ்நிலை மேலும் மேலும் வளர்ந்தால் நாட்டிலே நல்ல வரவு செலவுத் திட்டங்களும், அபிவிருத்தித் திட்டங்களும் உருவாக்கப்பட்டு அமுல் நடத்தப்படலாம்.



### தனித் தனி பல்கலைக் கழகம்

‘கல்வித்துறையிலே உயர்தரக்கல்வியைப் பற்றி நாங்கள் மிகவும் அக்கறை கொண்டிருக்கின்றோம். நடந்தேறிய உயர்தரக் கல்வியைப் பற்றிய சட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். தேசிய அரசாங்கத்தின் மீது இருக்கிற நம்பிக்கையின் பேரில் ஆதரிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு நாட்டுக்கும் அந்த நாட்டிலே உள்ள பல்வேறு சமூகங்களுக்கு ஏற்றதாக உயர்தரக் கல்வி நிலையங்கள் அமைய வேண்டும். இந்நாட்டிலேயுள்ள பல்கலைக்கழகங்கள் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காக இயங்க வேண்டும். இரண்டாவது, நாட்டின் இரு இன கலாசாரங்களுக்கும், அவ் விரு இனங்களின் முன்னேற்றத்திற்கும் ஏற்றதாக கலாசாலைகள் அமைய வேண்டும். இதனை நாங்கள் கருதுகிறோம். இரு மொழிகளைப் போதனமொழியாகக் கொண்ட பல்கலைக் கழகங்களும் தனியே ஒரு மொழி போதனா மொழியாகக் கொண்ட பல்கலைக்கழகங்களும் இந்நாட்டிலே நிறுவப்பட வேண்டுமென்று. அந்த முறையில் தமிழ் பேசும் மக்களுடைய விசேட கலாச்சாரத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஏற்றதாக ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும்.

### மதப்பிளவு ஆகாது

‘உயர்தரக் கல்வியை குறுகிய சமய ரீதியிலே பிரிக்கக் கூடாது என்று நாங்கள் நினைக்கிறோம். உயர்தர கல்விக்குச் சமய வேறுபாடு இல்லை. எந்தக் கல்வியிலும் பிரிவினை இருக்கக் கூடாது. சமய அடிப்படை கல்விக்கு இருக்க வேண்டுமென்றாலும் மத பிரிவினை உயர்தர கல்விக்கு இருக்கக் கூடாது. இந்த அடிப்படையான கருத்தை நாங்கள் சமர்ப்பிக்க விரும்புகிறோம். இதனாலே பல்வேறு சமயத்தினரின் கலாசாரங்களுக்கும் எங்களுடைய பல்கலைக் கழகங்கள் உதவாது என்று நினைக்கக் கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஏனைய சமயத்தின் கலாச்சாரங்களை, தத்துவக் கொள்கைகளை வளர்ப்பதற்கு ஏற்றதாக நன்றாக அமைக்கப்படலாம். ஆகையினாலே, எந்தச் சமயத்தைப் பின்பற்றுகின்ற நண்பர்களும் பல்கலைக்கழகங்களிலே அந்தந்தச் சமயத்துக்கேற்ற பகுதிகளை வைத்துக்கொண்டு நாடு முழுவதுக்கும் சேவை செய்யக்கூடியதாக, ஒரு இனம் முழுவதற்கும் சேவை செய்யக்கூடியதாக, மதரீதியிலே பிரிக்கக் கூடாத ஒரு சர்வகலாசாலை இயங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

### விஞ்ஞானக கல்வி அவசியம்

‘எதிர் வரும் கல்வித்திட்டப்புனர் அமைப்பிலே எங்களுடைய நல்ல பள்ளிக்கூடங்கள் பாதிக்கப்படமாட்டாது என்று நாங்கள் நம்புகிறோம். சென்ற அரசாங்கம் இலங்கையிலுள்ள - முக்கியமாக தமிழ் பகுதியிலுள்ள - நல்ல பாடசாலைகளைப் பாழாக்கிவிட்டது. இந்நாடு முன்னேற வேண்டுமென்றால் விஞ்ஞானக் கல்வி மக்களுக்கு மிகமிக அவசியமானது. விஞ்ஞானம் வளர வேண்டுமென்றாலோ கைத்தொழில் வளர வேண்டுமென்றாலோ விஞ்ஞானக் கல்வி முறை அவசியமானது. அந்த விஞ்ஞானக் கல்வியை போதியளவில் தமிழ் பகுதிகளுக்குக் கொடுக்காமல் தடைசெய்தது சென்ற அரசாங்கம். அந்த அரசாங்கம், கல்வியிலே ஒரு வகுப்புவாதக் கொள்கையை அமுல் நடத்தியது. இந்தப் பள்ளிக்கூடங்களிலே, அதாவது தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே இத்தனை விஞ்ஞான ஆசிரியர்கள் இருக்கிறார்கள், சிங்களப்பள்ளிக் கூடங்களிலே அத்தனை பேர்கள் இல்லை என்ற ஒரு பிழையான ஒப்பு எடுத்துச் சொல்லி விஞ்ஞான ஆசிரியர்களைத் தமிழ்ப் பகுதிகளிலே நியமனம் செய்யாமல் தடுத்து வைத்தது. இதனால் நாட்டின் கல்வித்தரம் குறைந்தது. இது எப்படியென்றால் தெற்கில் இத்தனை தென்னமரங்கள் இருக்கின்றன, இத்தனை தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. இத்தனை இறப்பர்த் தோட்டங்கள் இருக்கின்றன, இதனாலே வடக்கிலே இத்தனைக்குமேல் மரங்கள் நாட்டக்கூடாது என்று சொன்னது போல் இருக்கின்றது.

### ஒருமொழி ஒற்றுமை வளர்க்காது

‘இங்கே நண்பர் ஒருவர் சொன்னார், ஒரு மொழியாலே ஒற்றுமையை இந்நாட்டிலே கொண்டு வரலாமென்று. ஆனால், சென்ற அரசாங்கம் ஒரு மொழியாலே ஒற்றுமையைக் கொண்டுவர முடியாமல் இருந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒரு மொழி என்ற கொள்கை இலங்கையை இரண்டாகப் பிரித்து வைத்தது. இலங்கையை மட்டுமல்ல ஒரு மொழியைப் பேசும் இரண்டு மதத்தினரையும் பிரித்து வைத்திருந்தது. சிங்களம் பேசும் கிறிஸ்தவர்களும் சிங்களம் பேசும் பௌத்தர்களும் இந்த நாட்டிலே ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள். இந்த நிலை மாறி இந்த அரசாங்கத்தின் கீழ் சிங்களம் பேசும் கிறிஸ்தவர்களும் சிங்களம் பேசும் பௌத்தர்களும், இந்துக்களும இஸ்லாமியர்களும் ஒன்று சேர்ந்து எல்லா மக்களும் ஒற்றுமையாக இயங்கக் கூடியதாக இருக்கின்றது.

### விரிந்த உள்ளம் வேண்டும்

‘இன்று ஒரு முக்கியமான அடிப்படைத் தத்துவத்தை எங்கள் கல்வித் திட்டத்தின் மூலம் போதிக்க வேண்டியிருக்கிறது; ஒரு நண்பர் இங்கே பேசும் பொழுது ஒரு மொழியால் இந்த நாட்டிலே ஒற்றுமையை உண்டாக்கலாம் என்று சொன்னார்’ இப்படிப்பட்டவர்களை சுவிட்சர்லாந்து போன்ற தேசங்களுக்கு அனுப்பி அத்தேசங்களில் இருக்கக் கூடிய அரசியல் அமைப்புக்களை ஆராய்ந்து அறியச் செய்தல் வேண்டும், அந்த நாடுகளிலே இருக்கும் நிறுவனங்களையும் கலாசாரப் பண்புகளை வளர்க்கும்நிலையையும் இவர்கள் கற்கக் கூடியதாகத் திட்டங்களை வகுத்தால் இந்த நாடு முன்னேறமுடியும். ஒரு கலாச்சார ஒருமையால் இந்த நாடு முன்னேற முடியாது. ஒரு மொழி ஒரு கலாசார ஒருமையை நாம் வற்புறுத்தினல் மக்களிடையே போட்டா போட்டிகளும் கிளர்ச்சிகளும் தான் வளருவடையும்' எல்லாச் சமூகங்களினது கலாச்சாரப் பண்பையும், நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நாட்டிலுள்ள சகல சமூகங்களினது கலாசாரங்களையும், நாம் இந்த நாட்டினது கலாசாரங்களாக ஏற்றுக் கொள்ளும் பொழுதுதான் இந்த நாடு ஒற்றுமையாக இயங்கும். இந்த நாட்டிலுள்ள கலாசாரங்கள் எல்லாம் இந்த நாட்டினது தேசிய கலாசாரங்கள்தான், இந்த நாட்டிலே பேசப்படுகின்ற மொழிகள் எல்லாம் இந்த நாட்டினது தேசிய மொழிகள் தாம். இந்த நாட்டினது மதங்கள் எல்லாம் இந்த நாட்டினது தேசிய மதங்கள் தாம். இவ்விதமாக விரிந்த பரந்த அடிப்படையில் மனதைச் செலுத்தினல்தான் நாங்கள் இந்த நாட்டிலே ஒற்றுமையாக வாழக் கூடியதாக இருக்கும்.

இதற்கு அடுத்தபடியாகக் கைத்தொழில்களைப் பற்றி ஒரு சில விஷயங்களை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவாகத் தென்இலங்கையிலே நாட்டிற்கு நல்ல வருவாயைத் தரத்தக்க பெருந் தேயிலை, தென்னை, இறப்பர் தோட்டங்களும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் பலவும் நிறுவப்பட்டு, இருக்கின்றன. ஆனால் வடக்கு மாகாணத்திலோ கிழக்கு மாகாணத்திலோ வன்னிப்பகுதியிலோ அல்லது அனுராதபுரத்திலோ நாட்டிற்கு அதிக வருவாயைத் தரக்கூடிய பெரிய தொழில்கள் எதுவும் இல்லை. ஆகவே, இந்தத் தேசிய அரசாங்கம் இப்பகுதிகளில் நல்ல வருவாயைத் தரக் கூடிய தொழில்களை நிறுவ வேண்டும், அத்துடன் இப்பகுதிகளின் இயற்கை வளங்களை ஆராய்ந்து அதற்கேற்பத் திட்டங்களை வகுத்து அமுல் நடத்த வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்பகுதிகள் முந்திரிகை, பருத்திச் செய்கை ஆகியவற்றிற்கு ஏற்ற பகுதிகளாகவும் உள்ளன என்பதையும் இங்கு கருத்திற் கொள்வது நல்லது.

### கைத்தொழிற் பேட்டைகள்

‘இங்கேஇன்னுமொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். எக்கலையில் கைத்தொழிலுக்காக ஒரு பேட்டையே அதாவது Industrial

(14-ம் பக்கம் பாாக்க)

‘இந்திய தேர்தற்களம்’
அடுத்த இதழில்
வெளியாகும்


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவிங்கள்பு.




ராஜபீடி ‘ஸ்பெஷல்’

(போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடமிருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-11

# தமிழ் பேசும் இனத்துக்கு

# தமிழரசு வாலிபர்கள் ஆற்றி வரும் பணி

## மாவிட்டபுரம் மாநாடு புதிய திட்டம் தீட்டட்டும்

இ. மகேசுவரன்

ஒ ுலக நாடுகளின் அல்லது இனங்களின் விடுதலைச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், அந்தந்த நாடுகளின் - அந்தந்த இனங்களின் விடுதலைப் போருக்கு ஈட்டிமுனைகளாக விளங்கியவர்கள் இளைஞர்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம். பெரியவர்கள், தலைவர்கள் திட்டங்களை ஆக்கிக் கொடுக்கலாம். ஆனால், துணிவுடன், எது வந்தாலும் வரட்டும் என்ற உறுதியுடன் விடுதலைப்போரை முன்னின்று நடத்தி வெற்றி கண்டவர்கள் - வெற்றி கண்டுவருபவர்கள் வாலிபர்களே.

### துணை இயக்கம்

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப்போராட்டங்களிலும், வாலிபர்களுக்குப் பெரும் பங்குண்டு. இனத்துக்கு நேர்ந்து விட்ட இழி நிலையையும், மொழிக்கு நேர்ந்துவிட்ட பழியையும் இனத்தையும் மொழியையும் மாற்றாருக்கு பதவி ஆசை கொண்டு காட்டிக் கொடுத்த 'தலைவர்களின்' துரோகத் தன்மையையும் கண்டு கொதித்து குமுறி நின்ற தமிழ் பேசும் வாலிபர்களை, ஒரு அணியில் கொண்டு வந்து, அவர்களின் கொதிப்பையும் குமுறலையும் எழுச்சியையும் அவம் போக விடாது, விடுதலைப் போருக்கு தயார் படுத்துவதற்கென்றே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணை இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது தமிழரசு வாலிப முன்னணி.

### உலைக்கூடம்

தமிழரசு வாலிப முன்னணி, தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போருக்கு எதையும் தாங்கும் இதயம் கொண்ட இளைஞர்களை தயார் செய்யும் உலைக்களமாக உருவெடுத்தது. வெறும் உணர்ச்சி வசப்பட்டு செய்வதறியாது திகைத்து நின்ற தமிழ் வாலிபர்களை ஒரு அணியாக்கி ஒரு கொள்கையின் கீழ், ஒரு தளபதியின் கீழ் கொண்டு வந்த பெருமை தமிழரசு வாலிப முன்னணிக்கே உரியது.

நாட்டிலே, தமிழரசு இயக்கத்தை, பரப்பி, கட்சியின் இலட்சியங்களையும் கொள்கைகளையும் மக்களுக்கு உணர்த்தியதுடன், ஆஷாடபூபதிகளாக, மக்களை ஏமாற்றிக் கொண்டு வந்த அன்றைய 'தலைவர்களின்' முகத்திரையைக் கிழித்து மக்களுக்கு உண்மையை உணர்த்திய பெருமையும் தமிழரசு வாலிபருக்குண்டு.

### தளபதியின் சேவை

தமிழரசு வாலிப முன்னணியை தோற்றுவித்து, அதன் தலைவராகப் பொறுப்பேற்று, முன்னணியை கட்டிவளர்த்து விடுதலைப் போருக்கு தமிழ் இளைஞர்களை உருவாக்கிய பெருமை தமிழரசுக் கட்சியின் இன்றைய பொதுச் செயலாளரும், வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான தளபதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கே உரியது

### தியாக வரலாறு

தளபதி அமிர்தலிங்கத்தின் தலைமையின் கீழ் நாளிலும் பொழுதிலும் வளர்ந்த தமிழரசு வாலிப முன்னணி 1954 ம் ஆண்டு நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்ட முதல் 1961 ம் ஆண்டு நடைபெற்றம பெரும் சத்தியாக்கிரகம் வரை ஒவ்வொரு போராட்டத்திலும் ஆற்றிய பணி அளப்பரிது. 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை'' என்ற புரட்சிக் கவிஞரின் பாடலைப் பாடிக்கொண்டு நூற்றுக்கணக்கான தமிழரசு வாலிபர்கள் கட்சியின் ஆணையை ஏற்று, செந்தமிழ் மொழிக்கு உரிமை கோரி சிறை சென்ற தியாகம் சொல்லுந்தரமன்று. தங்கள் எதிர்காலம், பற்றி எந்த விதக்கவலையுமின்றி தமிழரசு வாலிபர்கள் இனத்திற்காக செய்த தியாகங்கள் சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய ஒன்றாகும்.

போராட்ட நேரங்களில் மட்டுமல்ல, தேர்தல் நேரங்களிலும், மாற்றுக் கட்சியினரின் பொய்யுரைகளையும், புழுகுரைகளையும் அக்கு வேறு ஆணி வேறாக்கி, மக்களுக்கு உண்மையை உணர்த்தி, சரியான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக் கூடிய மனத்தெளிவை மக்களுக்கு ஏற்படுத்தியதும் தமிழரசு வாலிப முன்னணியென்று கூறலாம்.

குடியேற்றத் திட்டங்களின் விபரங்களை மக்களுக்கு எடுத்துக் கூறி, குடியேற்றத் திட்டங்களில் தமிழ் பேசும் மக்களைச் சென்று குடியேறும்படி நிர்ப்பந்தித்து, அதற்கு வேண்டிய உதவிகளையும் தமிழரசு வாலிப முன்னணி செய்து வந்தது. செய்தும் வருகிறது.

சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் களைவதிலும், சாதி ஒழிப்புப் போராட்டத்திலும், தமிழரசு வாலிபர்கள் சளைத்தவர்கள் அல்லர். தீண்டாமை யொழிப்பை மேடையில் மட்டுமல்லாது ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் வாழ்வில் நடை முறையில் அனுஷ்டித்தும் வருகின்றனர்.

### 11-வது மாநாடு

தேசிய அரசு பதவிக்கு வந்து, தமிழரசுக்கட்சியும் அதில் இணைந்திருப்பதால், போராட்டம்என்ற 'கத்தி' இன்று உறையில் போடப்பட்டு விட்டது. எனவே இன்றைய நிலையில் தமிழ் பேசும் வாலிபர்களின் உணர்ச்சிகளும் எண்ணங்களும், தமிழ் பிரதேசத்தின் பொருளாதாரத்தை வளப்படுத்தலிலேயே திருப்பப்பட வேண்டும். அதற்கான திட்டங்களை திட்டவும், ஆராயவும் தமிழரசு வாலிப முன்னணியின் 11 வது தேசிய மாநாடு மாவிட்டபும் நகரிலே இம் மாதம் 21-ம், 22-ம், 23-ம் திகதிகளிலே கூடுகிறது.

> இம்மாதம் 21-ம், 22-ம், 23-ம்திகதிகளில் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் 11-வது தேசிய மாநாடு காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்த மாவிட்டபுரத்தில் கூடுகிறது.
>
> அதையொட்டி தமிழரசு வாலிபமுன்னணியின் தோற்றத்தையும், தமிழரசு வாலிப முன்னணி ஆற்றிவரும் பணிகளையும் பற்றி விளக்கும் இக்கட்டுரை இங்கு இடம் பெறுகிறது.
>
> தமிழரசு வாலிபர் இயக்கத்தில் ஆரம்பகாலமுதல்உறுப்பினராக இருந்துவரும் திரு. இ. மகேசுவரன் அவர்கள் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

### வருக வருக

தமிழரசு வாலிபர்களின் புதிய தலைவரான மீன்பாடும் தேனாட்டின் தலைமகனும் செந்தமிழ் செல்வனுமாகிய திரு. செ. இராசதுரையும், பொதுச் செயலாளரான, கொக்குவில் தந்த கொள்கை வீரன், அஞ்சாநெஞ்சன் அருணாசலமும, பொருளாளர்களான திருநாவுக்கரசும், சேவியரும், துணைச்செயலாளர்களான, சின்னத்துரையும், வீரசுப்பிரமணியமும், நிர்வாகச் செயலாளரான திரு. சி. பாலசிங்கமும், மாவிட்டபுரம் நோக்கி மறத் தமிழர் பெரும் படையை அழைக்கின்றார்கள்!!

மாவிட்டபுரத்தில் கூடும் மானமிகு தமிழர்படை, புதிய திட்டம் தீட்டி புதிய வேகத்துடன் செயற்பட வேண்டுமென தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வெல்க தமிழரசு வாலிப முன்னணி!!

## உண்மை சோஷலிசம் மலர....!

'ஏழை--பணக்காரன் வித்தியாசம் எப்படி ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல், சோஷலிசத்தைக் கொண்டுவரமுடியாது!

'அந்தக் காரணத்தை அறியாமல், சுற்றிலும் சீமான்களை வைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருப்பது வேடிக்கைதான்!

'திடீரென்று ஒருவர்வந்து, உங்களைக் கைலாயத்துக்கு அழைத்துப்போகிறேன்' என்றால், உங்களுக்கும், 'போகலாம்' என்றுதான் தோன்றும். ஆனால், 'எப்படி அது முடியும்' என்று கேட்கமாட்டீர்களா?-உடனே அவர், 'வெள்ளிக்கிழமை இரவு உன் வீட்டிலே விருந்து; விருந்து முடிந்ததும் நான் ஒரு லேகியம் தருவேன்; அதை உண்டதும், நீ கைலாயம் போகலாம்' என்பார்! அந்த லேகியத்தில் விஷம் இருந்து நீங்கள் செத்துப்போனால், 'ஆமாம்; அவர்தான் கைலாயம் போகவேண்டுமென்றார்; நான் லேகியம் கொடுத்தேன்' என்றுதான் வந்தவர் சொல்லுவார்!

'எனவே, ஏன் பலர் ஏழையாகவும், சிலர் மட்டுமே பணக்காரர்களாகவும், இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் சமதர்மம் வராது!

'இங்கே நீங்கள் பல தீர்மானங்களை உருவாக்கினீர்கள்; இதில் ஏர் பிடிப்பவர்கள் இருக்கிறீர்கள்—வண்டி ஓட்டுபவர்கள் இருக்கிறீர்கள்; ஆனல் உங்களில் எத்தனைப்பேர் நாளை வீடு திரும்பியதும் வட்டிப்பணம் எண்ணப் போகிறீர்கள்? எத்தனைப்பேர் வாடகைப்பணம் வசூலிக்கப் போகிறீர்கள்?

'நீங்கள் உழைத்துப் பிழைப்பவர்கள்! ஆனால் சிலர், உழைக்காமல் சீமான்களாக இருக்கிறார்கள்! இதற்கான காரணத்தைக் கண்டு பிடித்து வித்தியாசத்தை நீக்கினால் தவிர, சோஷலிசம் பேசிக்கொண்டிருப்பதால் காரியம் நடக்காது!

'பணம் ஓர் இடத்தில் குவிவதைத் தடுத்தால்தான், ஏழை—பணக்காரன் வித்தியாசம் ஒழியும்! வருவாய்த் துறை அத்தனையும் ஒரு சிலரிடமும், உழைப்பதுவேறோர் கூட்டமும் என்றிருந்தால், ஏழை—பணக்காரன் வித்தியாசம் எப்படி ஒழியும்?

'நான் ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறேன்; படித்ததைக் கவனமாகப்படித்திருக்கிறேன்; படித்ததைக்கவனம் வைத்திருக்கிறேன்; மறந்து போகாமல் இருக்கத் திரும்பத் திரும்பப் படிக்கிறேன்; நான் படித்த எந்தப் பொருளாதார நூலிலும், 'சோஷலிசம் என்றால் அதில் ஏழையும் இருப்பான்—பணக்காரனும் இருப்பான்' எனச் சொல்லவில்லை!

'ஆலை முதலாளியும் இருப்பான்—ஆறுமுகமும் இருப்பான்; இலட்சாதிபதியும் இருப்பான்-தரித்திர நாராயணனும் இருப்பான்; கழுத்தில் வைரமாலை அணிந்தவனும் இருப்பான்-கழுத்தில் நோய் உள்ளவனும் இருப்பான் என்றால், அது சோஷலிசம் ஆகாது! எதைச்செய்ய வேண்டுமோ அதைப் பேச வேண்டுமே தவிர, மக்களைக் குழப்பக்கூடாது!

'உண்மையான சோஷலிசம்வேண்டுமானால்—மெய்யான சமதர்மம் வேண்டுமானால், 1967ல் கழகத்தை ஆட்சியில் அமர்த்த வேண்டும்! அதற்கேற்ற வகையில் வெற்றி நடைபோட்டு நம் கழகக் கொடி பட்டொளி வீசிப் பறக்க வகை செய்ய வேண்டும்!'

—அறிஞர் அண்ணா,
(சிவகங்கை மாநாட்டில்).


மலச்சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு

**ரிஷிலேகியம்**

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேககாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், சூதக சிக்கல், உள்மூலம் வெளிமூலம், இரத்த சீழ்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் குணமடைவர். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

15 நாள் மருந்து ரூ. 3-50

30 நாள் மருந்து ரூ. 6-50




ரிஷி நேத்திர சஞ்சிவியின் புதிய விலை:

6 அவுன்ஸ் பாட்டல் 3-50

12 ,, ,, 6-50

சுதந்திரன்

SUTANTIRAN

1966 ஆகஸ்ட் மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 8411 த. பெ. 1188


# ஜே. ஆர். விஜயமும் வாலிபர் கடமையும்

தமிழரசு வாலிப முன்னணியின் மாநாடு இவ்வாரம் நடைபெறுகிறது. மாநாட்டின் இறுதி நாள் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவும் கலந்து கொள்கிருர்.

கிழக்கு மாகாணத்துக்குச் சென்றுதிரும்பிய பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இரு வாரங்களுக்கு முன்பு வட பகுதிக்கு விஜயம் செய்தார். அவரது விஜயம் இரு பெரும் இனங்களிடையே நல்லெண்ணம் வளரவும், தேசிய ஒற்றுமை ஓங்கவும் பெரிதும் உதவியது. அந்த நல்லுறவையும், ஐக்கியத்தையும் மென்மேலும் வளர்ப்பதற்கு இராஜாங்க அமைச்சரின் விஜயம் பயன்பட்டுள்ளது. தேசிய அரசாங்கத்தின் பிரதமரும், இராஜாங்க அமைச்சரும் இன ஐக்கியத்தை உருவாக்கும் பணியில் முன்னேடிகளாக நின்று பாடுபடுவதைக் கண்டு, தமிழ்ப் பேசும் மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

பிரதம மந்திரியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்தவர்கள் ஒரு தவற்றைச் செய்துவிட்டார்கள். அதன் விளைவாக யாழ்ப்பாணத்துக்கு மட்டும் சென்று திரும்ப வேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்பட்டது. இதர தொகுதிகளுக்கு விஜயம் செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. அதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. அதனுல் ஏற்பட்ட குறையை நிறைவு செய்துள்ளார் இராஜாங்க அமைச்சர்.

அமைச்சர் திரு. ஜயவர்தன மாநாட்டில் கலந்து கொண்டு மட்டும் கொழும்புக்குத் திரும்புவதானுல், அவரது, விஜயத்தின் முழுப்பயனையும் மக்கள் அடைய முடியாமல் போய்விடுமல்லவா? ஆதலின் ஆங்காங்கு மக்கள் மத்தியிற் சென்று அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறியும் வாய்ப்பையும் வசதியையும் அமைச்சருக்குச் செய்துகொடுத்தனர் தமிழரசுப் பாராளுமன்றப் பிரதிநிதிகள். சென்ற இடமெல்லாம் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த விரிவான ஏற்பாடுகளின் விளைவாக, ஜே. ஆர். இரு தினங்கள் வட பகுதியில் தங்கியிருந்து, தீவுப்பகுதி உட்பட இதர பகுதிகளுக்கும் விஜயம் செய்து மக்களின் கோரிக்கைகளுடன் 'அவர்களின் எண்ணங்களையும், உணர்ச்சியையும் தெளிவாக அறிந்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சரின் விஜயம் வட பகுதியில் மட்டுமின்றி — அகில இலங்கையிலும் தமிழ்ப் பேசும் மக்களிடையே ஒரு சுமுகச் சூழ் நிலையை உருவாக்க உதவியிருப்பதுடன், சிறப்பாக வட இலங்கை வாலிபர்களிடையே புதிய உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழரசு வாலிபர் முன்னணி தமிழரசுக் கட்சியின் ஒரு முன்னேடி ஸ்தாபனமாகும். தமிழரசுக் கட்சி நடாத்திய உரிமைப் போராட்டங்களிலே இந்த வாலிபர்கள் முன்னணியில் நின்றனர். தமிழரசு இயக்கங்களில் உணர்ச்சி வேகம் ததும்பிக் கொண்டிருந்ததற்குக் காரணம் இளைஞர்களின் செயலாக்கமே. அவர்களின் துடிதுடிப்பும், தீவிரமும், துணிவும் அவ்வியக்கங்களிலும் காணப்பட்டன.

இந் நாட்டில் மட்டுமின்றி சகல நாடுகளிலும் பெரும் அரசியல் மாற்றங்களை இளைஞர்கள் கொண்டு வந்துள்ளனர். இந்தோனேஷியாவிலே தொழிலாளர் வர்க்கம் பலம் வாய்ந்தது. மாபெரும் தொழிற் சங்கங்கள் அங்கு உண்டு. ஆனுல், புரட்சிகரமான இத் தொழிலாளர் வர்க்கத்தையே பின்னணிக்குத் தள்ளி, அவர்களைச் செல்லாக்காசாக்கிவிட்டு, இளைஞர்கள் முன்னேறி வந்ததுடன் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் நிலையில் அவர்கள் இன்று இருக்கின்றனர். இந்தோனேஷியாவில் பழைய அரசாங்கத்தை வீழ்த்தி, ஒரு புதிய அரசாங்கத்தை நிறுவியவர்கள் அந்நாட்டு இளைஞர்களே.

இத்தகைய மாபெரும் சக்தியும் ஆற்றலும் இளைஞர்களிடம் உண்டு தமிழரசு வாலிபர்கள் உரிமை போராட்டங்களிலே தங்களின் சக்தியை ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் இன்னும் முடியவில்லை. அடிப்படை உரிமைகள் அனைத்தும் பெறும் வரை இப் போராட்டம் ஓயாது. தமிழரசு வாலிபர்களின் உரிமை உணர்ச்சியும் அடங்காது. உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடும்போதே, மற்றொரு கடமையை நிறைவேற்றும் பொறுப்பும் இன்று வாலிபர்களின் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதுதான் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் மகத்தான பணி.

தமிழ்ப் பகுதிகளிலே படித்த வாலிபர்களிடையே வேலையின்மை அதிகரித்து வருகிறது. அரசியல் நிலைமை மாற்றத்தின் காரணமாக, அவர்கள் இனிமேல் அரசாங்க உத்தியோகங்களை நம்பியிருக்கவும் முடியாது. விவசாயத்திலும், கைத்தொழில்களிலும், கடற்றொழிலிலும், வர்த்தகத்திலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டிய வேளை வந்து விட்டது.

இதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதோடு, தமிழ்ப் பிரதேசங்களிலே தொழில்களும், விவசாயமும் பெருகி பொருள் உற்பத்தி அதிகரித்து, விலைவாசிகள் குறைந்து, பொருளாதாரம் அபிவிருத்தியடையவும் வழி பிறக்கும். இதனுல் நாடு செழிக்கும் — குறிப்பாக தமிழ்ப் பகுதிகள் சுபீட்சம் பெறும்.

இந்தப் பொறுப்பைத் தமிழரசு வாலிபர்கள் இன்று துணிச்சலுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அதற்கான திட்டங்களுடன் உடனடியாக செயலில் இறங்கவும் வேண்டும். இந்த மகத்தான பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு தமிழ்ப் பேசும் இளைஞர்களுக்கு வழி காட்ட வேண்டியது தமிழரசு வாலிபர் மாநாட்டின் கடமையாகும்.

# அமைச்சர்கள் விஜயமும் பிரதிநிதிகள் கடமையும்

தமிழரசு வாலிப முன்னணியினரின் 11-வது தேசிய மாநாடு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற மாவிட்டபுரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு அவர்களும் அவருடன் கூட அவரது உதவி அமைச்சர் திரு. அட்டபத்துவும் கலந்துகொள்ளுகிருர்கள்.

தேசிய அரசாங்க அமைச்சர்களில் இற்றைவரை வட பகுதிக்குச் செல்லாதிருந்தவர் திரு. ஜெயவர்த்தனு அவர்களே. தேசிய அரசாங்க அமைச்சர் என்ற முறையில் இது அவரது முதலாவது வடபகுதி விஜயமாகும். தேசிய அரசாங்கத்தில் உள்ள ஏனைய அமைச்சர்களை விட இராசாங்க அமைச்சர் அரசியல் முக்கியத்துவம் பெற்றவர். பிரதமருக்கு அடுத்த இடத்தில் வைத்துக் கணிக்கப்படுபவர். உதவிப் பிரதமரும்கூட. இந்த வகையிலும் அவரது வட பகுதி விஜயம் ஏனைய அமைச்சர்களினது வருகையைவிட ஒரு படி கூடிய முக்கியத்துவம் பெற்றதாகவே இருக்கிறது.

## குறைகளைக் கூற வேண்டும்

முதல் தடவையாக வட பகுதி செல்லும் இராசாங்க அமைச்சர் நீண்ட காலத்தின் பின்னர் தமிழர்களை அவர்களின் சொந்தப் பிரதேசத்தில் சந்திக்கப் போகிருர். தலைநகரில் தமிழர்களைக்கண்ட அமைச்சர், அவர்களை அவர்களது தாயகத்தில் காணும்போது உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். கடந்த பத்தாண்டுக் காலமாக தமிழ்ப்பகுதி எங்ஙனம் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நேரில் காண முடியும். அத்துடன் தமிழ்ப் பகுதிகளுக்கு இன்று அவசரமாகத் தேவைப்படுவது எது என்பதையும் அறிந்து தெரிந்து கொள்ள முடியும்.

தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் அவர்கள் திரு. ஜெயவர்த்தனுவை தீவுப்பகுதிக்கு அழைத்துச் சென்று குடிதண்ணீர்ப் பிரச்சினைபற்றி நேரில் எடுத்து விளக்க இருக்கிருர் என்று ஒரு செய்தி கூறுகிறது. கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினமும் இராசாங்க அமைச்சரைத் தனது தொகுதிக்கு அழைத்துச் செல்கிருராம். அவ்வப் பகுதி மக்களின் குறைகளை மட்டும் எடுத்துக்கூறுவதுடன் இவர்கள் நின்றுவிடாது, பொதுவாக தமிழ் பேசும் மக்கள் தேசிய அரசாங்கத்திடமிருந்து எவற்றையெல்லாம் எதிர்பார்க்கிருர்கள் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறவேண்டும்.

## தமிழ் மொழிச் சட்டம்

எத்தனையோ இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்குமிடையில் தமிழ் மொழி சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனுல் சட்டமாக்கப்பட்ட தமிழ் மொழி மசோதா இன்றுவரை சட்ட அந்தஸ்துடனேயே இருக்கிறது. முழுமையாக அமுல் நடத்தப்படுவதாகத் தெரியவில்லை. இன்னும்பல திணைக்களங்களிலிருந்து தனிச் சிங்களக் கடிதங்களே தமிழ்ப் பகுதி மக்களைச் சென்றடைகின்றன. தமிழ்ப் பகுதிகளில் வழங்கப்படும் பெரும்பாலான அரசாங்கப் படிவங்கள் இன்றும் தனிச்சிங்களத்திலேயே உள்ளன. இதனுல் தமிழ்ப் பொதுமக்கள் பெரிதும் இன்னலடைகிருர்கள். இவற்றையெல்லாம் இராசாங்க அமைச்சருக்கு ஆங்காங்கே விருந்து படைக்கும் நேரத்தில் எடுத்துக்கூற வேண்டியது மக்கள்பிரதிநிதிகளின் தலையாய கடமையாகும்.

இவற்றைவிட, இன்று வட பகுதியில் தாண்டவமாடும் படித்த வாலிபர்களின் வேலையில்லாப் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாகும். குறிப்பாக பட்டம் பெற்ற ஆயிரக் கணக்கான வாலிபர்கள் ஆறு, ஏழு ஆண்டுகளாக எத்தகைய வேலையுமின்றி வாழ்க்கையில் விரக்தியடைந்த நிலையில் இருக்கிருர்கள். இவர்களின் பிரச்சினை பற்றியும் இராசாங்க அமைச்சரிடம் எடுத்துக்கூற வேண்டியது தமிழரசாரின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

## ஆடம்பரம் வேண்டாம்

அமைச்சர்களை அழைத்து அவர்களுக்கு நிலபாவாடை விரித்து, 'சிகரம்' கட்டி சோடனைப் பந்தலின் கீழ் பேச வைப்பதில் மட்டும் கவனம் செலுத்துவதில் காரியமாகாது.

சுதந்திரன் அரசியல் நிருபர்

கண்டிய நடனம் முன் செல்ல, பல்லக்கில் பவனிவந்து மேடையில் அமர்ந்து பேசிவிட்டுப் போவது அமைச்சர்களுக்கும் இலகுவான வேலை. அவர்களை அழைத்தவர்களுக்கும் அது இலகுவான காரியம். வேடிக்கை காட்டுவதற்கு இது காலமுமல்ல, வேடிக்கை காட்டுவது மக்கள் பிரதிநிதிகளின் கடமையுமல்ல.

அமைச்சர்கள் ஒரு பகுதிக்கு விஜயம்செய்வதுவெறுமனே அப்பகுதி மக்களின் தலைகளைப் பார்த்துவிட்டுப் போவதற்கல்ல. மக்களின் குறைகளை நேரில் கண்டு பரிகாரம் காணுவதற்கே அமைச்சர்கள் சுற்றுலா மேற்கொள்ள வேண்டும். அதற்கான வழியையும் அழைப்பவர்கள் செய்து கொடுக்க வேண்டும்.

இரு வாரங்களுக்கு முன்னர் தேசிய அரசின் முதலமைச்சர் என்ற முறையில் முதல் தடவையாக வட பகுதி சென்ற பிரதமர் அவர்களுக்கு மக்களை நேரில் சந்தித்து குறைகளைத் தெரிந்து கொள்ளவோ அவர்களின் இன்னல்களைப் பார்ப்பதற்கோ சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. அது பிரதமரின் குறையல்ல; அவரை அழைத்தவர்கள் விட்ட தவறே அது. அத்தகைய தவறு இராசாங்க அமைச்சரின் விஜயத்தின் போதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை இங்கு நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

## சுயநலமும் கூடாது

அமைச்சர்களினது விஜயத்தை யாரும் சுயநலத்திற்குப் பயன்படுத்திவிடக் கூடாது. அல்லது நாமே அழைத்தோம் என்று சொந்தம் கொண்டாடிவிடவும் முற்படக்கூடாது. பிரதமர் கல்முனை மாநாட்டில் கலந்து கொண்டார். ஆனுல், அவரின் கிழக்குமாகாண விஜயம் கல்முனை மாநாட்டில் பேசுவதுடன் மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை. கல்முனை மாநாட்டைப் பயன்படுத்திக் கொண்டு பிரதமர் கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியைச் சுற்றிப் பார்வையிட்டார் இதனுல் அப்பகுதி மக்களின் குறைகளை நேரில் தெரிந்து கொள்ள அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. தமிழரசாரும் பிரதமருக்கு எத்தகைய கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. அவரும் கட்டுப்படவில்லை.

கல்முனை மாநாடு நிகழ்ச்சி ஒன்றுக்கு மட்டுமே அவர்கள் பொறுப் பேற்றனர். ஏனைய நிகழ்ச்சிகளைப் பிரதமர் தமது விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்ப நிரல்படுத்திக் கொண்டார். இராசாங்க அமைச்சரின் வடபகுதி விஜயம் அப்படி ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவே நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

இராசாங்க அமைச்சரின் வடபகுதிவிஜயத்தின் நோக்கம் தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டில் கலந்து கொள்வது. மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னர் அவர் பலதொகுதிகளுக்குச் செல்கிருர். பரந்தனில் வானொலி அஞ்சல் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுகிருர். தீவுப்பகுதி மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையை நேரில் பார்த்தறியச் செல்கிருர். மதக்கடமைகளைச் செய்வதற்காக நாகதீபத்திருச் செல்கிருர். இத்தனைக்கும் பின்னர் வாலிபர் மாநாட்டில் உரை நிகழ்த்தப் போகிருர்.

## இரு எம். பி. கள்

பிரதமர் வடபகுதிக்குச் சென்றிருந்த பொழுது அவரது மதக்கடமைகளைச் சரியாகச் செய்வதற்குக்கூட வசதி செய்து கொடுக்கப்படவில்லை. நாகதீபத்திற்குச் சென்றுவர அழைத்தவர்கள் வசதி செய்து கொடுக்க மறுத்துவிட்டார்கள். நகரில் பவனி செல்வதற்காக மட்டும் நல்லூருக்கும், புத்த விகாரைக்கும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிருர். பிரதமரை யாழ்ப்பாணத்தொகுதிக்கு வெளியில் அழைத்துச் சென்றுவிட்டால் பிற்பகல் கூட்டத்திற்கு மக்கள் வரமாட்டார்கள் என்பது ஒரு கவலை. மற்றக் கவலை, யாழ்ப்பாணத் தொகுதிக்கு வெளியில் பிரதமரைக் கூட்டிச் சென்ருல் அழைத்தவர் முதல் மனிதர் என்ற இடத்தை வகிக்க முடியாது. இச் சுய நல காரணங்களால் பிரதமரின் வட பகுதி விஜயம் உரிய பயனை அடையத்தவறி விட்டது.

இத்தகைய சுய நல எண்ணங்களோ, தவறுதல்களோ இராசாங்கஅமைச்சரின் வட பகுதி விஜயத்தில் ஏற்படமாட்டாது. அவர் ஊர்காவற்துறையிலிருந்து -கிளிநொச்சிவரை சுற்றுலா செய்கிருர். இதில் கலந்து கொள்ள இரண்டு பிரதிநிதிகள் மறுத்துவிட்டார்கள்: ஒருவர் வவுனியா பிரதிநிதி, மற்றவர் யாழ்ப்பாணப் பிரதிநிதி. இராசாங்க அமைச்சர் வவுனியாவுக்குச் செல்லவில்லை. எனவே வவுனியாப் பிரதிநிதி தான் கலந்து கொள்ள மாட்டேன் என்று கூறியதில் பொருளில்லாமற் போய் விட்டது. இந்த பொருளற்ற ஒரு செய்தியை வெளியிடும் வண்ணம் யாழ்ப்பாணப்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசு வாலிப முன்னணி 11-வது மாநாடு

## இராசாங்க அமைச்சரும் முத்தமிழ்க் காவலரும் உரை நிகழ்த்துவார்கள்

மாவிட்டபுரம் ஆக-20

நாளை பிற்பகல் இரண்டு மணிக்கு விடயாலோசனைக் குழுக் கூட்டத்துடன் ஆரம்பமாகும் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் மாநாடு தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெறும். மூன்றும் நாள் நிகழ்ச்சியில் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களும் திருச்சி அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் கலந்து கொள்கிறார்கள்.

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள தியாகி நடராசன் அரங்கில் நாளை (21-8-66) பிற்பகல் 2-00 மணிக்கு விடயாலோசனைக் குழுக் கூட்டம் நடைபெறும். இரண்டாம் நாள் நிகழ்ச்சி அதே அரங்கில் 22-ம் திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகிறது. கொடியேற்றம் தொண்டர் படை அணி வகுப்பு ஆகியவற்றை அடுத்து திரு. சோ. சேனாதிராசா அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்துவார். அதனையடுத்து வாலிப முன்னணித் தலைவர் திரு. செ. இராசதுரை தலைமையுரை நிகழ்த்துவார்.

காலை 11 மணிக்கு ஐயாவு, பிரான்சிஸ் அரங்கில் தொழிலாளர் மாநாடு திரு. சி. க. சபாபதி தலைமையில் ஆரம்பமாகும். திருவாளர்கள் செ. கனியப்பெருமாள், பீதாம்பரம், பொ. கனகரத்தினம், ஆ. கந்தையா, ஆ. கென்றி, வ. ஐயாத்துரை ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள் திரு. சி. மூ. இராசமாணிக்கம் பா. உ. சிறப்புரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 2-00 மணிக்கு விபுலானந்தர் அரங்கில் இலக்கிய மாநாடு ஆரம்பமாகும். முதலில் திரு. அம்பி தலைமையில் கவியரங்கு நடைபெறும். கவிஞர்கள் நீலாவணன், காசி ஆனந்தன், வி. கந்தவனம், தில்லைச் சிவன், பா. சத்தியசீலன் ஆகியோர் கவியரங்கில் கலந்துகொள்வார்கள். கவியரங்கை அடுத்து திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் இலக்கிய பேரவை கூடும். இதில் இரசிகமணி கனகசெந்திநாதன், மயிலை சிவசண்முகம், செம்பியன் செல்வன், மகேஸ்வரி கிருஸ்ணன், கு. வி. செல்வத்துரை, த. இராசலிங்கம், பொன். முத்தக்குமாரன், வேல் மாறன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இதனை அடுத்து கலைவாணர் அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

23-ம் திகதி காலை அரசியல் மாநாடு நடைபெறும். பிற்பகல் கொக்குவிலிலிருந்து ஆரம்பமாகும் மாபெரும் சயிக்கிள் ஊர்வலத்தைத் தொடர்ந்து காங்கேசன்துறைப் பட்டினசபை முன்றலில் பொதுக்கூட்டம் நடைபெறும். தமிழரசுத் தலைவர்களும் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்களும், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் திரு. அட்டப்பத்துவும் உரை நிகழ்த்துவார்கள்.

### ஒற்றுமையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் தமிழ் வாலிபரின் நீங்காக் கடமையாகும்.

''முக்கியமாக இன்னும் ஒன்றுண்டு. தமிழ் பேசும் மக்களிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளை, தீண்டாமைப் பேயை ஒழித்துக்கட்டவும் வாலிபர்கள் முன் வருதல் அவசியம். தீண்டாமையொழிப்பு என்பது வாலிபர்களினால் மட்டுமே செய்யக் கூடிய ஒன்று என்பது எனது கருத்து.''

தமிழரசு வாலிப முன்னணிப் பொதுச்செயலாளர் தமிழன் பாசறை நா அருணாசலம் மாநாட்டையொட்டி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது!

'தமிழினத்தின் பூரணவிடுதலையே இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் குறிக்கோள். வாழு, வாழ விடு என்ற புனிதமான கொள்கையுடன் அமரர் வன்னியசிங்கம் காட்டிய பாதையிலே தமிழரசு வாலிப முன்னணி வீரநடைபோட்டு வருகிறது. தமிழரசு இயக்கம் வெறும் அரசியல் இயக்கம் மட்டுமல்ல, அது ஒரு விடுதலை இயக்கம் என்பதையும் தமிழரசு வாலிப முன்னணி மறக்கவில்லை.

"சிங்கள மக்களை நாம் வெறுக்கவில்லை. அவர்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழவே, நாம் சமஷ்டி அரசியல் கோருகிறோம். சிங்கள மக்களுடன் நமது நட்புறவை வளர்க்கவே இராசாங்க அமைச்சரை மாநாட்டுக்கு அழைத்துள்ளோம்.

''அன்று நம்மை மதிக்கத் தவறியவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டிய நமது கரங்கள், இன்று நம்மை மதித்தவர்களை மலர்மாலையுடன் வரவேற்கிறது.''

### முத்தமிழ்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

மல்ல, நல்ல எழுத்தாளரும் கூட. இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். திருக்குறளில் அவருக்கு நிறைந்த ஈடுபாடு உண்டு. இலக்கிய நூல்களுடன் நாட்டு வைத்திய முறை பற்றியும் கூட ஒரு சில நூல்களை அவர் எழுதியுள்ளார்.

தமிழ் நாட்டு பிரபல வர்த்தகர்களில் ஒருவரான திரு. விசுவாதம் அவர்கள் திருச்சிராப் பள்ளியில் வாழ்ந்து வருகிறார்.

### அமைச்சர்கள்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதியே அவரைத் தூண்டியிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

யாழ்ப்பாணப் பிரதிநிதி இராசாங்க அமைச்சரின் விஜயத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்று கூறியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 1. 'தமிழரசார் பிரதமர் விஜயத்தில் நடந்து கொண்டது போல் நான் இராசாங்க அமைச்சர் விஜயத்தில் நடந்து கொள்ள மாட்டேன்' என்று கூறிக் கொள்வதற்கும்; 2. இராசாங்க அமைச்சரின் விஜயத்தில் திரு. ஜீ. ஜீ. க்கு முதல் இடம் கொடுக்கப்படமாட்டாது. அவர் எப்பொழுதும் இரண்டாவதாக இருக்க விரும்புவதில்லை.

#### பயன் வேண்டும்

எது எப்படி நடந்து கொண்ட போதிலும் இராசாங்க அமைச்சரின் விஜயத்தை வட பகுதி மக்கள் உரிய முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஆடம்பர அலங்காரத்தில் நேரத்தை செலவிடாது ஆக்கமான முறையில் காரியமாற்ற வேண்டும். 'அமைச்சர் வந்தார்—சென்றார்' என்று முடிந்து விடாமல்; 'அமைச்சர் வந்தார்— அதைச் செய்தார்' என்ற முறையில் திரு. ஜெயவர்த்தனவின் வட பகுதி விஜயம் வெற்றிகரமாக அமைய வேண்டும்.

ANTON

தரம்
பூரணத்துவம்
சேவை
ஆகியவற்றின்
சின்னம்

நீங்கள் நினைவில் இருத்த வேண்டிய பெயர்
நீங்கள் நம்பத் தகுந்த நாமம்
செண்ட் அந்தனீஸ் தொழில் துறைக் குழு
952/1, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 9.

GRANTS/0002

எமது சிறுகதை

# அவளுக்குத் தெரியும்...

'மலர்'

சடக் சடக்!

"கொக்கரக்கோ"! 'கொக்கரக்கோ!'

சேவல்கள் சிறகடித்துக் கூவுகின்றன. டாண்! டாண்! சாமப் பூசைக் குறிகுறியாகக் காளி கோயில் மணி முழக்க மிடுகின்றது. புரண்டு படுத்த பாக்கியம் மணிச் சத்தத்தினால் திடுக்கிட டுக் கண் விழிக்கின்றாள். குளிரினால் கை, கால்களெல்லாம் சில்லிட்டுப் போகின்றன. எழும்புவோமென எண்ணிடுகிறது மனம். ஆனால் எழும்ப முடியாமல் நித்திரை கண்ணைச் சுழட்டுகிறது. மறு பக்கம் திரும்பிப் படுக்கிறாள், எங்கும் அமைதி. கண்கள் மூடிப் போகின்றன.

'கொக்கரக்கோ! கொக்கரக்கோ!!

கடைசிச் சாமக் கோழியும் கூவிவிட்டது. இனிமேல் படுக்க முடியாது. சோம்பல் முறித்துக் கொண்டு எழும்புகிறாள். சுர்...சுர்... பக்கத்து அறைகளில் படுத்திருப்பவர்களின் குறட்டை ஒலி காதைத் துளைக்கிறது. அவர்கள் நல்ல நித்திரையில் ஆழ்ந்து போய்க் கிடக்கிறார்கள். அவளுக்கு மட்டும் முடியுமா அப்படிப்படுக்க? அவள் அந்த வீட்டு வேலைக்காரி. இயந்திரமாக உழைத்தால்தான் அங்கு நிலைத்திருக்க முடியும் இல்லாவிட்டால் 'போ வெளியே' என்று சொல்லிவிடுவார்கள்

சமையலறையில் பம்பரமாகச் சுழலுகிறாள். அடுப்பைப் பற்றவைக்கப்போனால் ஒரே புகையாக எழும்புகிறது. ஈரமாக இருந்ததால் விறகுகள் எரிய மறுக்கின்றன. ஊதி, ஊதி முகமே சிவந்துவிட்டது. ஐந்து மணிக்குத் தாய் தகப்பன் உட்பட பத்துப் பேருக்கு 'பெட் காப்பி' கொண்டு போக வேண்டும். பின் முகம் கழுவச் சுடுதண்ணி வைக்க வேண்டும். அது குளிர்காலமாம். பச்சைத் தண்ணீரில் முகம் கழுவினால் 'தடிமல்' வந்துவிடுமாம். ஏழு மணிக்குள் காலைச் சாப்பாடு தயாராகிவிட வேண்டும். பிட்டு அவிப்பதென்றால் இலேசுதான். ஆனால் அவர்கள் சாப்பிடமாட்டார்கள். பிட்டுக் கெதியில் செமிக்காதாம், அதனால் இடியப்பந்தான் வேணுமாம். எசமானியம்மாளின் சட்டமிது. பணக்காரர்களுக்குப் பசிக்கிறதும் குறைவுதானே.

'பாக்கியம் ஐயா கக்கூசிலிருக்கிறார். தண்ணி கொண்டு வரட்டாம்'' சின்ன எசமானி கலாவின் குரல்.

'பாக்கியம் வாடி இங்கே. இந்த முதுகை ஒருக்காத் தேய்ச்சிற்றுப் போ' கிணற்றடியில் குளித்துக்கொண்டிருக்கும் சீதா கூப்பிடுகிறாள்.

கிணற்றடிக்குப் போய் வருவதற்கிடையில் அடுப்பிலிருந்த 'சொதி' பொங்கி வழிந்து வெறும் சட்டியிருக்கிறது. தேங்காய்த் துருவித் திரும்பவும் சொதி வைக்கிறாள். எல்லோருக்கும் சாப்பாடு கொடுத்தாகிவிட்டது. பாடசாலைக்கும், அலுவலகத்துக்கும் போகப்போகிறார்கள். போவதற்கு முன் அவளிடம் சுமத்தப்படும் வேலைகள் சொல்லப்படுகின்றன.

'பாக்கியம் இண்டைக்கு வயிற்றுக்குள்ள சுகமில்லை. சரக்கு அரைத்துப் பத்தியக் கறிவை'

'சரி ஐயா.'

'வாளிக்குள் உடுப்புப் போட்டிருக்கிறன் தோய்ச்சுப்போடு. சேட்டுக்கு நீலம் போட மறந்திடாதே.'

சரக்! சரக்! செருப்புகளின் சத்தம் படிக்கட்டுகளிலே தேய்ந்து மறைகிறது.

'பாக்கியம் இங்கே வாடி'.

அவளுக்கு ஐந்து வயது. இளமையான கலா, பீ. ஏ. பட்டதாரி பாடசாலைக்குப் போக வெளிக்கிட்டுக்கொண்டிருக்கிறாள். அவளின் குரல்தான் அது. அங்கே கண்ணாடிக்கு முன்னால் தன் அழகை ஒவ்வொரு கோணத்திலும் நின்று பார்த்து ரசிக்கிறாள். கூடைக் கொண்டை தலையை அழகு படுத்தத் தான் உடுத்திருக்கும் சிவப்புச் சாறிக்கேற்ற செருப்பைக் கால்கள் மாட்டிக்கொள்கின்றன. 'பொண்டஸ்' பவுடரின் வாசனை மூக்கைத் துளைக்கிறது.

கதவோரத்திலே நின்ற பாக்கியம் தன்னை ஒரு தரம் பார்க்கிறாள். கிழிந்த லங்காச்சிலை காரிக்கன் சட்டை. நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து நீண்ட பெரு மூச்சொன்று வெளி வருகிறது.

கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர். கலாவின் மேல் பதிந்த கண்கள் இமைக்க மறுக்கின்றன.

'பின்னேரம் உஷாவும், குமாரும் வருவார்கள். பற்றிசும் செய்து, பாயாசமும் காய்ச்சி வை உப்புக் கூடியிருந்தால் உன் தலையில் தான் ஊற்றித் தேய்ப்பன்..

அதிகாரக் குரலில் ஆணையிட்டுப் போகிறாள். அவளுக்குத் தெரியுமா? இத்தனை வேலைகளுக்கிடையில் அவை செய்வதற்கு எவ்வளவுக் கஷ்டப்படவேண்டுமென்று.

பாக்கியம் பெயரளவில் பாக்கியந்தான். ஆனால் அவளைப் போல் துரிப்பாக்கியசாலி இந்த உலகத்தில் வேறு யாரும் கிடையாது. அம்மா, அப்பா என்றழைக்க இந்த உலகத்தில் ஒருவருமில்லை. பாக்கியத்தின் தாய் பர்வதம் நல்ல அழகி. அவர்கள் பக்கத்து விட்டிலிருந்த வாலிபன் பர்வதத்தை மணக்கிறேன் என்று ஆசை வார்த்தைக் காட்டி தன் உணர்ச்சிக்குப் பலியாக்கிவிட்டு ஊருக்குப் போய் வருகிறேன் என்று போனவன் அதற்குப் பின் திரும்பி வரவேயில்லை. பர்வதமோ மூன்று மாதக் கர்ப்பிணி. இன்று நாளை என்று, எதிர் பார்த்து ஏங்கிப் போனாள். ஊரும், உலகமும். அவளைத் தூசித்தது. வெளியே தலை காட்ட முடியாத அளவுக்கு ஊரார் தூற்றத் தொடங்கி விட்டார்கள். பாக்கியத்தின் பாட்டிதான் ஒருவாறு சமாதானப்படுத்தி வைத்திருந்தாள். அவளுக்கோ உலகத்தில் வாழ விருப்பமில்லை. ஆனால் வயிற்றிலிருக்கும் சிசுவுக்காக வேண்டியாவது அவள் வாழ்ந்துதானே ஆகவேண்டும்.

பர்வதத்தின் இடைவிடாத முனகல்களுக்கிடையே இவ்வுலகத்துக்கு வந்தாள் பாக்கியம். அவள் பிறந்த பின் பர்வதம் சன்னியினால் பிதற்றத் தொடங்கினாள். சிறிது நேரத்திற்குப் பின் இவ்வுலகத்தை நிரந்தரமாகப் பிரிந்து போய்விட்டாள்.

பாக்கியத்தின் பாட்டி மகளின் பிரிவால் துடிதுடித்துப் போய் அழுதாள் புரண்டாள். ஆனால் இறந்தவர் திரும்பி வரமுடியுமா? காலம் சிறிது சிறிதாக அவள் மனப் புண்ணை ஆற்றியது. பாக்கியத்தை வளர்ப்பதில் ஒருவாறு ஆறுதலடைந்தாள்.

பாக்கியத்திற்கு ஏழு வயது. தற்செயலாக அந்தக் கிராமத்துக்கு வந்த, அட்வகேட்' தம்பையா படிப்பிக்கிறேன், நகை நட்டுச் செய்து போடுகிறேன் என்றெல்லாம் பாட்டியிடம் கூறி அவளைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டார். அவளுக்குத் தெரியுமா சமையலறைக்கு அமர்த்தப் போகிறாரென்று.

பிரம்ம தேவனும் பாக்கியத்திடம் தான் தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறான். எலுமிச்சம் பழ நிறத்தில், இளமையில் விம்மிப் புடைத்திருக்கின்ற வாளிப்பான அவயவங்கள், ஏக்கம் நிறைந்த அந்த விழிகளில் தான் எத்தனை கவர்ச்சி, எல்லோரையும் போலப் பட்டுப் புடவை, நகைகள் அணிய வேண்டும் என்று அவளுக்கும் ஆசை தான். ஆனால் முடியுமா அவளால்?

ஆசையை அடக்க மாட்டாதவளாய் ஒருவருமில்லாத நேரத்தில் கலா உடுத்து விட்டுக் கொடியில் கிடந்த பட்டுப் புடவையை அவள் உடுத்தி அழகு பார்த்த போது? கலாவின் பார்வையில் அவள் தென்பட்டு அவள் வாங்கிய அடிகள் தான் எத்தனை? இப்போது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. அதற்குப் பின் அவள் உணர்ச்சிகள் மரத்துப் போய் விட்டன. ஆசைப் பட்டாலும் கிடைக்கப் போகிறதா? அவள் அந்த வீட்டு வேலைக்காரி, பம்பரமாகச் சுழல வேண்டியவள் பட்டுப் புடவைக்கு ஆசைப் பட முடியுமா?

எது எப்படியிருந்த போதிலும் காலம் தன் கடமையைச் செய்யத் தவறுவதில்லை. கலாவுக்குக் கல்யாணமாகி அவள் கணவன் வேலை பார்க்குமிடத்திற்கு வந்து விட்டாள். அவளுக்கு ஒத்தாசை செய்யப் பாக்கியமும் அனுப்பி வைக்கப்பட்டாள் அவர்களிருவரும் சிரித்துச் சிரித்துப் பேசுவதையும், நொடிக்கொருதரம் உடுத்திக் கொண்டு வெளியே போவதையும் பார்த்து பாக்கியத்தின் உள்ளத்திலும் ஆசை உணர்வுகள் துளிர் விடும். ஆனால் அவை கருக வேண்டியவை தானே?

வெயில் நன்றாகக் காய்ந்து கொண்டிருக்கிறது. கச்சான் காற்றும் தன் கை வரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. பின்னேரம் மூன்று மணியாகிவிட்டதால் பாக்கியம் தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறாள்.

'பாக்கியம்! ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டு வருகிறேன். இரவுக்குக் கறிகாய்ச் சாதம். இரண்டு சுண்டு அரிசி போட்டால் போதும்' இவ்வளவையும் சொல்லிவிட்டுக் கலா போகிறாள். நிறை மாதக் கர்ப்பிணி அவள். தாய்மையுற்ற உடல் ஒரு விதப் பொலிவுடன் பிரகாசிக்கிறது.

வீடு அமைதியாக இருக்கிறது அவளைத் தவிர வேறு யாருமில்லை. கலாவின் கணவன் குமார் வருவதற்கு ஐந்து மணியாகும். ஒவ்வொரு அறையாகக் கூட்டிக் கொண்டு கடைசியாகக் கலாவின் படுக்கை அறைக்குள் நுழைகிறாள்.

திடீரென்று அவள் கையை யாரோ பிடிக்கிறார்கள். அவளுக்கு உடலெல்லாம் நடுங்குகிறது. போகப் போகப் பிடியின் அழுத்தம் கூடுகிறது. நிமிர்ந்து பார்த்தவள் திடுக்கிட்டாள். ' ஐயாவுக்கு இப்படி ஒரு சின்னப் புத்தியா? என அவள் நெஞ்சம் ஓலமிடுகிறது. போதையூட்டும் விழிகளுடன் கலாவின் கணவன் நின்று கொண்டிருக்கிறான். 'பாக்கியம் போகாதே. கலா வர நேரமிருக்கிறது' அவன் கெஞ்சுகிறான். அவனின் நோக்கம் அவளுக்குப் புரிந்தது.

'ஐயா! உங்களைப் போன்ற ஒருவரால்தான் என் தாய் சீரழிக்கப் பட்டு விட்டாள். என்னையும் அந்த நிலைக்கு ஆளாக்க வேண்டாம். ஏழையாயிருந்தாலும் எனக்கு மானந்தான் பெரிது,!

ஆனால் அவன் விடத்தயாரில்லை. எங்கிருந்துதான் அவ்வளவு பலம் வந்ததோ தெரியாது. கையை உதறிவிட்டு வெளியே பாய்கிறாள். படார்! காலில் தலைமோதி இரத்தம் வடிகிறது.

'என்னடி அது' இந்நேரம் பார்த்துத்தானா கலா வர வேண்டும். அவள் எழும்பி நிமிர்வதற்குள் அவன் முந்திக் கொண்டான்.

'பார் கலா! நீ இல்லாத நேரத்தில் அறைக்குள் வந்து என்னோடு தவறாக நடக்கப் பார்த்தாள், நான் பிடித்துத் தள்ளிவிட்டேன். வேலைக்கார நாய்களை வைக்கிற இடத்தில் வைக்கவேணும்'

ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு தாக்கினாலும் அவ்வளவு அதிர்ச்சியடைந்திருக்கமாட்டாள் பாக்கியம். அவன் பேச்சைக் கேட்டதும் அவளுக்கு உலகமே சுழல்கிறது. பேச முடியாமல் தொண்டை அடைத்து விட்டது.

உண்மைதான்! அவன் போனதற்கு அடையாளமாக தும்புத்தடி அறைக்குள் கிடக்கிறது. ஆனால் அவள் அதற்காகவா போனாள்? பாக்கியத்தின் மௌனம் கலாவின் ஆத்திரத்தை இன்னும் கிளறியது. அவள் பத்திரகாளியாக மாறிவிட்டாள். உதையும், அடியும் மாறி மாறிப் பாக்கியத்தைப் பதம்பார்த்தன. சுருண்டு போய் மூலையில் கிடக்கிறாள்.

நன்றி கெட்ட நாயே, தப்பப் பிறந்த உனக்கு அந்தக் குணம் போகாதுதானே'

அவள் போட்ட கூச்சலில் அக்கம் பக்கத்தாரெல்லாம் வந்துவிட்டார்கள். அவர்களிடம் கலாவும் குமாரும் ஆங்கிலத்தில் ஏதோ கூறப் பதிலுக்கு அவர்களும் ஏதோ கூறுகிறார்கள். அதற்குப் பின் 'போடி வெளியே' என்று பிடித்துக் கொண்டு தள்ளிவிட்டுக் 'கேற்றை'ச் சாத்துகிறாள். இருபது வருடங்களுக்கு மாடாக உழைத்ததற்குக் கிடைக்கும் வெகுமதி அது. தாய் எட்டடிப் பாய்ந்தால் குட்டி பதினாறடிப் பாயும். தாயின் குணம் போகாது தானே'! கலாவின் கூச்சல் மங்கலாக கேட்கிறது.

அவள் எப்படியாவது சொல்லட்டும். அதைப் பற்றி கவலையில்லை. கலா மட்டும் அந்நேரம் வராதிருந்திருந்தால்... பலவந்தமாக அவள் கற்பு சூறையாடப் பட்டிருக்கும். அவளின் பெண்மை பாதுகாக்கப்பட்டு விட்டது. அது போதும் அவளுக்கு.

பாதையில் நடக்கும் போது எங்கே போகிறோமென்ற நினைவேயில்லை. அடிபட்ட கன்னம் வலிக்கத் தொடங்குகிறது. கால்கள் நடக்க மறுக்கின்றன. தள்ளாடித் தள்ளாடி நடக்கிறாள்.

தடால்! நடுரோட்டில் கிடந்த வாழைப் பழத் தோலில் கால் சறுக்கி பாதையின் குறுக்கே சாய்கிறாள். எழும்பி நிமிர்வதற்குள் அசுர வேகத்தில் வந்து கொண்டிருந்த கார் அவள் மீது மோதி விடுகிறது. 'கிறீச்'

'ஐயோ அம்மா'

கடைசியாக அவள் வாயிலிருந்து வந்த சொற்கள் அவை. அதற்குப் பின் அவள் உடல் அசையவேயில்லை. இரத்த வெள்ளத்திலே செயலற்றுப் போய்க் கிடக்கிறாள். ஆனால் உலகம் அவளைத் தூற்றிக் கொண்டுதானிருக்கிறது.

தூற்றட்டும்! நடந்த உண்மை அவள் உள்ளத்துக்குத் தெரியும். ஆனால் உலகத்துக்கு தெரியாது. தெரிந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாது இருந்தும் உண்மை உண்மைதானே!


## அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?

★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?

★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**

அன் கம்பெனி,

தலாவ (வழி) அநுராதபுரம்.

# 'குழப்பம் வேண்டாம்'

"இந் நாட்டிலே தமிழுக்கும் ஒரு இடம் கொடுத்த தேசிய அரசாங்கத்தின் கீழ் பணி புரிகின்ற தீவிர சிங்கள ஊழியர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை மீண்டும் புதுத்தி குழப்பம் விளைவிக்க முயலுகிறார்கள் இந்த முயற்சியில் இறங்க வேண்டாமென்று அவர்களை இச்சபையிலிருந்து கேட்டுக்கொள்கிறேன்" என்று பண்டிதர் கா. பொ. இரததினம் அவர்கள் வரவு-செலவு திட்டவிவாதத்தின்போது பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு இரத்தினம் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நிகழ்த்திய உரையின் விபரம் வருமாறு:

'வரவு செலவுத் திட்டத்திலே மக்களுக்குப் பயன்படுகின்ற பொருள்களின் வரி கூட்டப்பட்டது அல்லதுவில்லை கூட்டப்பட்டது என்று மக்கள் பரபரப்படையவில்லை. மாறாக மக்கள் அமைதியாகவே காணப்படுகின்றனர் காரணம் என்னவென்றால், முன்னைய அரசாங்கம் செய்ததைப்போலத் தேசிய அரசாங்கம் பொருள்களின் வரியைக்கூட்டி அல்லது வுக்கு இதுவரை ஒதுக்கப்படவில்லை. இது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக இவ்வரவு செலவுத் திட்டத்திலே காணப்படுகிறது.

'இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில்கமத்தொழிலுக்கு 219 கோடிரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது நான் அதைப்பற்றி அதிகம் விரித்துக்கூறவேண்டிய அவசியமில்லை. இந்த நாட்டின் உயிர் நிலையம் கமத்தொழில். கமத்தொழில் நல்ல முறையிலே இந்நாட்டிலே விரிவாக முன்னேற்றமடைந்து அதில் நாடு சுயதேவைப் பூர்த்தியடைந் யாத நிலையில் அது இன்று இயங்கிக் கொண்டிருக்கிறது'

என்னுடைய தொகுதியில் கமக்காரர்கள் கடன் பெறுகிறார்கள், பணம் இல்லாதவர்களுக்கு இன்று அரசாங்கம் பல வழிகளிலே கடன் கொடுக்கின்றது. ஆனால், என்ன நடக்கின்றது? இந்தக் கடனைப் பெறுவதற்கிடையில் அவர்கள் களைத்து விடுகிறார்கள். அரசாங்கத்திடமிருந்து பெறும் இந்தக் கடன் வேண்டாம்; முதலாளிமாரிடம் இப்பொழுது கடனை வாங்கிவிட்டு, பின் ஒரு புசல்

# அரசாங்க ஊழியர்களே! இரு இன மக்களையும் சமமாக நடத்துங்கள்

—o—

## பாராளுமன்றத்தில் பண்டிதர் வேண்டுகோள்

பொருள்களின் வரியைக் குறைத்து வியாபாரி மக்களுக்குக் கொள்ளை லாபம் அடிக்கின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தாததேயாகும். தேசிய அரசாங்கம்மக்களின் நன்மைக்காக திறமையான, நல்லதொரு கொள்கையைப் பின்பற்றும் என்று மக்கள் எண்ணியிருக்கின்ற படியால் தான் வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நாட்டிலே எந்தவிதமான ஒரு பரபரப்பும் ஏற்படவில்லை.

'ஒரு நாட்டிலே பொருளாதார முன்னேற்றம் உண்டாகவேண்டுமானால், அந்தநாட்டிலே அமைதி இருக்கவேண்டுமென்பதை இங்கு பலரும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்கள், ஆகவே அதைப் பற்றி நான் விரித்துக்கூற விரும்பவில்லை. திருக்குறளிலே ஒரு குறள் எனக்கு நினைவுக்கு வருகின்றது:

"ஆங்கமை வெய்தியக்கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

என்று திருவள்ளுவர் கூறுகிறார்

'எவ்வளவு வாய்ப்புக்கள் இருந்தாலும் அரசியல் அமைதியில்லா திருந்தால்——அரசியல் நிலையாக இல்லாதிருந்தால்-நிலையான கொள்கையில்லாதிருந்தால் எந்தவிதமான நன்மையும் ஒரு நாட்டுக்கு உண்டாகாது என்று கூறுகின்றார். எனவே ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை—மக்கள் மதிக்கத்தக்க ஓர் ஆட்சியை—முன்னிருந்த அரசாங்கததிலும் பார்க்கத் தேசிய அரசாங்கம் இந்நாட்டுக்கு அளித்திருக்கிறதென்பதை நாம் மறுக்கமுடியாது. அப்படிப்பட்ட ஒரு அடிப்படையிலே தான் முன்பிருந்ததைவிடச் சிறப்பான முன்னேற்றமான சூழ்நிலையை நாம் காணமுடிகிறது. இதனை எதிர்க்கட்சி நண்பர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

### கமத்தொழில்

'எனக்கு முன் பேசிய நிதி அமைச்சர் அவர்கள், பல ஆண்டுகளிலும் ஆக்கப்பணிக்குச் செலவழித்த தொகைகளிலும் பார்க்க இந்த ஆண்டிலே கூடுதலான தொகை செலவுசெய்யத் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்று கூறினார்கள், ஏறக்குறைய 76 கோடி ரூபா மேலதிக ஆக்கப்பணிகருச் செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது வேறு எந்த வரவு செலவுத் திட்டத்திலேனும் இவ்வளவு தொகையான நிதி மேலதிக ஆக்கப் பணிச்செல தால்தான் இந்நாட்டு மக்கள் சிரமமின்றி வாழத்தகக ஒரு நிலையை அடைய முடியும். எங்கள் உணவில் சுயதேவைப் பூர்த்தியைஇதுவரை அடையமுடியாமல் இருப்பது உண்மையிலே இந்நாட்டு மக்கள் எல்லோரும் வருந்தத்தக்க செயலாகும். ஐந்து ஆண்டுகளுக்கிடையில் நாட்டுக்கு வேண்டிய அரிசியை உற்பத்திசெய்து, அதில் சுயதேவைப் பூர்த்தியை உண்டாக்க முடியுமென்று கமத்தொழில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். அதனை நாடு மிகவும் வரவேற்கும் என்பதிற் சந்தேகமில்லை.

'கமத்தொழிலேலசில அடிப்படை உண்மைகளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கமத்தொழிலுக்கு நிலமும் நீரும் இன்றியமையாதன 'உணவெனப்படுவதுநிலத்தொடு நீர்' என்றுஒருபழைய பாடல் கூறுகிறது. எனவே, கமத்தொழிலுக்கு நிலமும் வேண்டும், நீரும் வேண்டும். இந்த இரண்டும் இலங்கையிலேஇயல்பாக அமைந்திருக்கின்றன. வேண்டிய நிலம் இருக்கிறது; மழை வளம் இருக்கிறது; ஆற்று வளம் இருக்கிறது. ஆனால், நிலத்தொடு நீரைச் சேர்க்கும் முயற்சிதான் குறைவாகக் காணப்படுகிறது. இன்னும் விரிவாகச்சொல்லப்போனால் எங்களுக்குப் போதிய நிலம் இருக்கிறது ஆனால் நீர் வசதிதான் இல்லை. அதனை அரசாங்கம்மனத்திற் கொள்ளல் வேண்டும் நிலத்தை விருத்தி செய்வதிலும் பார்க்க, இருக்கின்ற நிலங்களுக்கு நீரைக் கொடுப்பதுதான் மிகவும் முக்கியமானது. இந்தத் துறையிலே அரசாங்கம் வருகிற ஆண்டுகளிலே தனது முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும்.

### கூட்டுறவுஇயக்கம்

'அடுத்ததாக, கூட்டுறவு இயக்கம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பெரும்பாலும் பணவசதியில்லாத கமக்காரர்களுக்கு உதவியளிப்பதற்காக தொடங்கப்பட்ட ஓர் இயக்கந்தான் இது, மக்கள் தங்கள் கடமைகளைத் தாங்களே செய்யவும் தங்கள் பணக் குறைகளை நீக்கிக்கொள்ளவும் வாய்ப்பு அளிப்பதுதான் இந்தக் கூட்டுறவு இயக்கம், ஆனால் சென்ற அரசாங்கம் இதனைக் கெடுக்கும் முறையிலே கையாண்ட தவறுகளினால் அவ்வியக்கம் சீரழிந்துவிட்டது. இக்கூட்டுறவு இயக்கம் கமக்காரர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்கிறதா அல்லது தீமைகளைச் செய்கிறதா என்று கணிக்க முடி

நெல்லு ஏழு ரூபா அல்லது எட்டு ரூபா என்ற கணக்குப்படி கொடுத்துக் கடனைக் கழித்துவிடுவோம் என்று கமக்காரர்கள் சொல்லும் அளவுக்கு அரசாங்கத்திடம் கடன் பெறுவதில் கஷ்டம் இருக்கிறது. உத்தியோகத்தர்கள் மக்களுடன் ஒத்துழைக்காததே இதற்கு காரணமாகும். கமக்காரர்கள் நல்ல முறையிலே வேளாண்மை செய்ய வேண்டுமானால் அவர்களுக்குத் தேவையான கடன் உரிய காலத்தில் நல்ல முறையிலே கொடுக்கப்படவேண்டியது இன்றியமையாததாகும். அப்படிச் செய்யாத காரணத்தினால் எத்தனையோ பேர் மனச் சோர்வடைந்துவிட்டார்கள் இது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு அம்சமாகுமென அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

### கைத்தொழில்

'அடுத்ததாக, கைத்தொழில்களைப்பற்றி சில குறிப்புகளைக் கூற விரும்புகின்றேன். கமத் தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் தேசிய அரசாங்கம் முக்கியமான இடத்தை அளித்திருக்கின்றது. கைத்தொழிலுக்கென பல கோடிரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. தேசிய அரசாங்கத்துக்கு முன்னிருந்த அரசாங்கம் பல கைத்தொழில் நிலையங்களை நிறுவியிருக்கிறது. பல கூட்டுத்தாபனங்களையும் நிறுவியுள்ளது. ஆனால் இவற்றில் பல நட்டத்திலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் இந்தக் கைத்தொழில் நிலையங்களும், கூட்டுத் தாபனங்களும் அவ்வற்றுக்குத் தேவையான மூலப் பொருட்களுள்ள இடங்களில் நிறுவப்படாமல் அரசியல் காரணங்களுக்காக அரசாங்கம் தீர்மானித்த இடங்களில் நிறுவப்பட்டமையேயாகும். இந்தக் குறையை நீக்க வேண்டும். எந்தெந்த இடங்களில் மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அந்தந்த இடங்களிலேயே கைத்தொழில் நிலையங்களைத் தொடங்கி நடாத்த வேண்டும்.

'எங்கள் தேவைக்கென இப்பொழுது இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான சிமெந்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலே இரண்டாவது சூளை பல ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டிருந்தால் இதில் ஓரளவு தொகை மிஞ்சியிருக்கும். உருப்படாத பல அலுவல்களைச் சென்ற அரசாங்கம் செய்திருக்கிறது. யில் பசளைத் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவுவதற்கான வாய்ப்பு இருக்குமென்பதையும் சுட்டிக்காட்ட காட்ட விரும்புகிறேன்.

'அடுத்தாகக குடிசைக்கைத்தொழிலை எடுத்துக் சொல்வோம். இலங்கையில் பதினைந்து இருபது சத விகிதமான கைத்தொழிலில் ஈடுபடத்தக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன' ஆனால் இன்று இருக்கும் நிலை என்ன? குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடக்கூடிய பலருக்கு இன்று வேலை வாய்ப்புக்கள் இல்லை. இத்துறையில் ஈடுபட்டுக்கொண்

### பரந்தன் தொழிற்சாலை

'அடுத்ததாகப் பரந்தன் தொழிற்சாலையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். இந்தத் தொழிற்சாலையைப் பார்க்கும்பொழுது, சென்ற அரசாங்கம் தமிழ்ப் பகுதியிலிருந்த ஒரு தொழிற்சாலையை எந்த விதத்தில் புறக்கணித்திருக்கின்றது என்ற உண்மை புலனாகும். வாழைச்சேனையிலிருக்கும் தாள் ஆலையையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையையும் மூடும் அளவுக்குக் கடந்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தது என்பதை மிக்க வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தேசிய அரசாங்கத்தின் பின்னர்தான் வாழைச்சேனைத் தாள் ஆலை நல்ல முறையில் நயமாக இயங்கத் தொடங்கியது. இது போலவே, பரந்தன் தொழிற்சாலையும் நல்லமுறையில் விரிவடையச்செய்து முழுப் பலனையும் பெற முயற்சிசெய்ய வேண்டும். பரந்தன் தொழிற்சாலைக்கு அண்மை

### கைத்தறி நிலையம்

'இன்றைய அரசாங்கம் காணி அபிவிருத்தியைப் பொறுத்த அளவில் ஒரு நல்ல பணியைச் செய்து வருகின்றது. படித்த வாலிபர்களுக்குக் காணி கொடுத்து அவர்களைக் கொண்டு இந்த நாட்டிற்குத் தேவையான துணை உணவுப் பொருள்களை உண்டாக்கப் பல சிறந்த திட்டங்களைத் தற்போதைய அரசாங்கம் வகுத்திருக்கின்றது. இதற்காகக் காணி அமைச்சர் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நான் பாராட்ட விரும்புகிறேன். தேசிய அரசாங்கம் செய்துள்ள பல நல்ல பணிகளில் இரண்டை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கும் வாலிபர்களுக்கு குடியேற்றத் திட்டங்களில் வேலை வசதிகளை அளிக்க இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் உண்மையிலேயே வரவேற்கத் தக்கவையாகும். இது முதலா

(14-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# இலங்கையில் தமிழ் படங்களுக்கு தடை வராது

## தங்கவேலு தெரிவிக்கும் நம்பிக்கை

“இலங்கையில் தென்னிந்திய தமிழ்ப்பட இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட மாட்டாது என்று நான் நம்புகிறேன். தமிழ் படங்கள் தடை செய்யப்படுவதை இலங்கைத் தமிழர்கள் மிகவன்மையாக எதிர்க்கிறார்கள். தமிழ்ப் படங்களைத் தடை செய்யும் முயற்சிக்கு இலங்கைத் தமிழர்களின் அமைச்சரான திரு மு. திருச்செல்வம் கூட எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்” இவ்வாறு நகைச்சுவை நடிகர் கே. ஏ. தங்கவேலு, சென்னையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினார்.

தமது பேட்டியில் திரு. தங்கவேலு மேலும் கூறியதாவது:- ‘எங்கள் நாடக நிகழ்ச்சியொன்றுக்கு இலங்கையிலுள்ள தமிழ் அமைச்சரான திரு. மு. திருச்செல்வம் தலைமை வகித்தார்.



அவர் பேசியபோது ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட்டார். ‘இந்தியாவும் இலங்கையும் ரத்தப் பிணைப்பைக் கொண்டவை. நெடுங்காலமாக இருந்து வரும் இந்தப் பிணைப்பை தமிழ்ப்படங்களை இலங்கையில் திரையிடுவதைத் தடைசெய்வதன் மூலம் அறுத்து விடலாம் என்று சிறுதுபலர் சூழ்ச்சி செய்கின்றனர். அதற்கு நாங்கள் நிச்சயமாக இடங்கொடுக்கமாட்டோம். நாங்கள் இருக்கும் வரை, தமிழ் படங்கள் இலங்கைக்கு வந்துகொண்டுதான் இருக்கும்’ என்று உறுதியுடன் கூறினார்.

அப்பொழுது என் உள்ளம் பூரித்துப் போய் விட்டது. ‘சாமி, ஆண்டவனே, இலங்கையில் மந்திரிகளாக இன்று போல என்றும் தமிழர்கள் இருந்துவரணும்’ என வேண்டிக் கொண்டேன்.’

இலங்கைத் தமிழர்களைப் பற்றி திரு தங்கவேலு கூறியதாவது:-

‘தமிழருக்கு என்று ஒரு பண்பாடு இருந்ததாக எல்லோரும் சொல்லக் கேட்டிருக்கிறேன் ஆனால் அந்தப் பண்பாடு தமிழ் நாட்டில் ஏட்டளவில் தான் இருந்து வருகிறது இலங்கை சென்ற பின்பு தான் தமிழ்பண்பாட்டின் இனிமையை என்னால் உணர முடிந்தது. இலங்கைத் தமிழர்கள் எவ்வளவு மரியாதையுடனும் அன்புடனும் பழகுகிறார்கள் தெரியுமா? தங்களுடைய குழந்தைகளை நம்மிடம் அறிமுகப்படுத்தும் போதுகூட அவன், இவன் என்று கூறுவது கிடையாது.

‘இவர் என் மூத்த பையன். ஆறாவது படிக்கிறார் ‘இரண்டாவது பையன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்’ என்று அவர் இவர் என்று கூறுகிறார்கள். இங்கே என்னடான்னு தலைகீழ்! எல்லோரையும், ‘போடா’ ‘வடா’ ‘போடி’ ‘வாடி’ ‘பொட்டைக்கணணி’ என்று மரியாதையில்லாமல் பேசுவது சர்வசாதாரணமாகி விட்டது. உண்மையான தமிழர்கள் எல்லோரும் இலங்கைக்கு போய்விட்டார்களோ என்று நான் நினைக்கிறேன். இங்கிருப்பவர்கள் நானும்கூடத்தான்-போலித் தமிழர்களே!’

### பழனியிலே இருக்கும் பழம்

ஏ. எல். எஸ். புரொடக்சன்ஸ் ‘கந்தன் கருணை’ கலர்ப்படத்திற்காக சாரதாவில்

‘பழனியிலே இருக்கும்
அந்தப் பழம் — நீ
பார்வையிலே கொடுக்கும்
அன்புப் பழம் - பக்திப
பசியோடு வருவோர்க்கு
ஞானப் பழம்’

என்ற பாடல் சுசிலாவும் சூலமங்கலம் ராஜலட்சுமியும் பாட, கே. வி. மகாதேவன் இசையமைக்க ஒலிப்பதிவானது.



சிவாஜியின் அணைப்பில் தேவிகா மயங்கிக் கிடப்பது ஆண்டவன் கட்டளைப்படியல்ல; டைரக்டரின் கட்டளைப்படிதான். —படம்:- சினிமாஸ் திரைகளுக்கு விரைவில் வரவிருக்கும் ‘ஆண்டவன் கட்டளை’. இப்படத்தில் நடிகர்திலகமும், தேவிகாவும் உள்ளத்தைத் தொடும் வகையில் உருக்கமாக நடித்துள்ளார்கள்.

## அரசியலா? வேண்டாம்!!

“அரசியற்கட்சிகள் எதிலும் நான் சேரப்போவதில்லை. அப்படியொரு எண்ணம் எனக்குஒரு போதும் ஏற்பட்டதும் கிடையாது. கலைத்தொண்டு தவிர வேறு எதிலுமே நான் இறங்கப் போவதில்லை.”

நடிகை பத்மினி காங்கிரசில் சேர்ந்ததுபோல தாங்களும் ஏதாவது அரசியற்கட்சியில் சேரும் உத்தேசம் உண்டா என்று நடிகையர் திலகம் சாவித்திரியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். அவர் மேலும் கூறியதாவது:-

‘கலைஞர்கள் ஒரு கட்சியில் சேருவதை நான் விரும்பவில்லை. தேர்தல் வரும்நேரத்தில் எனக்கு விருப்பமானவர்களுக்கு வாக்கை அளிப்பதுடன் அரசியலில் எனது வேலை முடிந்துவிட்டது என்றே நான் கருதுகிறேன்’.


SATHYALAYAM'S
KASA NASINI
காஸ நாஸினி காச நாசனி

“காச நாசனி” எல்லாவிதமான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானாலும், கடுமையானதானாலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்ரோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

“ப்றதிச்சாய தகோகாஸ:
காஸாத் ஸம்ஜாயதேக்ஷய”

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனாகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றொரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15-25 சொட்டுகள் விகிதம் தினம் மூன்று முறை

விலை: 1 அவு. போத்தல் ரூ. 5/-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச்செட்டித் தெரு
கொழும்பு—13.


## வெண்ணிற ஆடை

### இலவச குறுக்கெழுத்துப் போட்டி

### சரியான விடையும் பரிசு பெறுவோர் விபரமும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஜெ | ய | 2 ல | லி | 3 தா | | 4 இ | 5 சை |
| 6 ய | ன் | ம | | தா | | 7 தா | ல |
| ம் | | ர் | | 8 த் | 9 ந் | கா | ஸ்ரீ |
| | 10 வி | நி | | | ச | | |
| 11 ச | ரோ | | 12 ம | னே | யா | வி | 13 தி |
| | தி | | 14 று | உ | தி | | யா |
| 15 சோ | | 16 தே | ள் | | | 17 வி | க |
| 18 பா | ல் | | 19 நா | த | சு | ர | ம் |

முற்றிலும் சரியான விடைகளை அனுப்பிய நேயர்களில் முதலாவது பரிசான 6 மேல் வகுப்பு டிக்கட்டுகளைப் பெறும் அதிஷ்டசாலியான நேயர்.

கணேசமூர்த்தி கந்தையா
கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி.

இரண்டாவது பரிசான 4 மேல் வகுப்பு டிக்கட்டுகளைப் பெறும் அதிஷ்டசாலி.

இ. பாலசுந்தரம்,
602/B, ஹவ்லக் ரோட்,
வெள்ளவத்தை.

மூன்றாவது பரிசான 3 மேல் வகுப்பு டிக்கெட்டுகளைப் பெறும் அதிஷ்டசாலி.

அ. மாணிக்கலிங்கம்,
கார்த்திகேய வித்தியாலயம்,
2-ம் வட்டாரம்
மண்டைதீவு.

தலா 2 மேல் வகுப்பு டிக்கெட் வீதம் ஆறுதல் பரிசு பெறும் 3 அதிர்ஷ்டசாலிகளும் வருமாறு:-

தர்மேஸ்வரி காராளசிங்கம்,
தபால் நிலையம்,
கல்முனை.

என். நவநேசன்,
மே/பா. வண. என். ஜி. ஜெயராசசிங்கம்,
சிட்டி மிஷன்,
டாம் வீதி, — கொழும்பு-12

சின்னையா செல்வநாதன்,
4-ம் குறிச்சி
ஏறாவூர்,
செங்கலடி.

வெகு விரைவில் இவர்களுக்கு இலவச டிக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டியில் கலந்து கொண்ட சகல நேயர்களுக்கும் சினிமாஸ் நிறுவனத்தினரும், சுதந்திரன் நிறுவனத்தினரும் நன்றி தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## திரைக்கு வரும் படங்கள்

இம்மாத இறுதிக்குள் ஆறு படங்கள் தமிழகத்திரைகளில் திரையிடப்படுமென தெரிகிறது.

‘நாம் மூவர்’ ஏற்கனவே திரையிடப்பட்டு விட்டது. இது தவிர, எம். ஜி. ஆர். நடித்த ‘தாலி பாக்கியம்’ பத்மஸ்ரீ கணேசன் நடித்த ‘அரிச்சந்திரா’, ‘தாயே உனக்காக’, ‘மகாகவி காளிதாஸ்’ எஸ். எஸ். ஆர். நடித்த ‘மறக்கமுடியுமா?’ ஆகிய ஐந்து படங்களும் இம்மாத இறுதிக்குள் திரைக்கு வந்து விடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

# தமிழ்த் திரைப் படங்களை கிண்டல் செய்வதை நிறுத்துக

## கன்னடத்துப் பைங்கிளி வேண்டுகோள்

"தமிழ்த் திரைப்படங்கள் இன்று எல்லோருடைய கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகி வருகிறது. திரைத்தொழிலில் ஈடுபட்டிருப்போரே, திரைத் தொழிலைப்பற்றிக் கேவலமாகப் பேச முற்படு கின்றனர். இந்த நிலைமை மாறவேண்டும்'' என் ருர் கன்னடத்துப் பைங்கிளி பி. சரோஜாதேவி.

அவர் மேலும் கூறுவதாவது:—

"பொதுவாக இன்று எல்லோருடைய இகழ்ச்சிக்கும் ஆளாகியிருக்கும் தொழில் திரைப்படத் தொழில்தான். அதற்குக் காரணம் எல்லோருடைய கவர்ச்சிக்கும் ஆளாகி, எல்லோரும் அதிலே ஈடுபடவேண்டும் என்ற ஆர்வத்தையும் உண்டாக்கி — ஆனால் எல்லோரும் நினைத்தவுடன் நெருங்க முடியாத ஒரு துறையாக அது இருக்கின்ற காரணத்தால் உடனே ஏமாற்றத்தின் எதிரொலி தெரிகிறது. அது இகழ்ச்சியாக உருவெடுக்கிறது.



"திரையுலகிற்கு வெளியே இருப்பவரின் குற்றச்சாட்டுக்களை நாம் ஓரளவிற்கு அனுமதிக்கலாம். ஆனால் அதே சமயம் அதே தொழிலில் ஈடுபட்டு பொருளீட்டி வருபவர்களும், இதைக் கிண்டல்செய்வதும், தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்துகேவலமாகப் பேசுவதும் நாகரிகமான செயல்' என்று யாராலும் ஒப்புக்கொள்ள முடியாது.

"இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு அவர்கள் எத்தனை நாட்கள் பாடுபட்டிருப்பார்கள்? எவ்வளவு நாட்கள் கனவு கண்டிருப்பார்கள்? இன்று அனுபவிக்கும் கார் பவனியும், கை நிறைய பொருளும், நிம்மதியான வாழ்வும், சுலபத்தில்கிடைத்திருக்கமுடியாதே! அதையெல்லாம் நினைவிலிருந்து விரட்டிவிட்டு கேவலமாகப் பேசலாமா?

"நம்நாட்டுப் படமா? அது வெறும் குப்பை. ஏதோ நாய் வேடம் போட்டுவிட்டோம் குறைக்கிறோம். மேல்நாட்டுப் படங்களைப்போல தரமுண்டா? தகுதியுண்டா? என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள் சிலர். இது வேதனையைத் தருகிறது.

"நம்நாட்டுத் திரைப்படத் தொழில் சீர்கெட்டுக்கிடக்கிறது என்று அவர்கள் கண்ணோட்டத்தில் மனப்பூர்வமாக நம்பினால், அதை நமக்குள் வைத்துக்கொண்டால் நல்லது. வெளிப்படையாகச் சொல்லி விலாநோகச் சிரிப்பது திரைத்தொழிலைக் கேலி செய்துவரும் பலருக்கும் பாதை அமைத்தது ஆகாதா?

"என்னைப் பொறுத்தவரை வெளியில் உள்ளவர்கள் என்னைப் பற்றி ஆயிரம் தான் சொன்னாலும் திரையுலகில் என்னுடன் தொடர்புகொண்டவர்கள் என்மேல் நிச்சயமாக நல்லெண்ணமேகொண்டிருக்கிறார்கள்.

"காரணம் நான் தொழிலையே முக்கியமாக கருதுகிறேன். அதைக் குறைகூறுவதில்லை. என் கண்ணுக்கு ஏதேனும் குறைகள் தென்பட்டால் அதைநீக்கவே எண்ணமிடுகிறேன்.


"அவ்விதம் தொழிலையே தெய்வமாக மதிக்கிற காரணத்தால்தான் இந்தப்புனிதமான தொழில் என்னை வாழ வைக்கிறது.''

## முசலிப் பிரிவிலே முத்தமிழ்க் கலை விழா

கிராமியக் கலைகளைப் பேணிக் காக்கவும், தமிழ் மொழியின் சிறப்புக்களைப் போற்றவும், மக்களிடையே நல்லெண்ணத்தை உருவாக்கவும் உதவப்போகும் கலைவிழா ஒன்று நானாட்டான் றோ. க. பாடசாலை மைதானத்தில் 31-8-66ல் 4-30 மணிக்கு நடைபெறப் போகின்றது.

முசலிப் பிரிவு யாழ். மக்கள் ஆர்வத்தோடு பங்குகொள்ளும் இக்கலை விழாவில் பண்டைக்கால வரலாறுகளைச் சித்திரிக்கும் நாடகங்கள், கிராமிய நடனங்கள், சமூக நாடகங்கள், பாட்டுக்கள், கவி அரங்கம் போன்ற சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறுமென அறியப்படுகின்றது.

கலைவிழாவுக்கான ஏற்பாடுகளை முசலிப்பிரிவுக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் அவர்களும், அப்பிரிவுப் பொதுமக்களும் தீவிரமாகக் கவனித்துவருகின்றனர்.



திருமணம் முடித்த முதல் இரவிலேயே இந்தப் பதிகளுக்குள் ஊடல் ஏற்பட்டு விட்டதோ?—படம்: சினிமாஸ் திரைகளில் இப்பொழுது வெற்றிகரமாக காட்சியளிக்கும் 'அருணகிரிநாதரில்' இசையரசர் டி. எம். சௌந்தரராசனும், சாரதாவும்.

## கணேசனின் கண்ணீர்

மெஜஸ்டிக் ஸ்ருடியோவில் ஜெமினி கலாமந்திரின் 'மகாகவி காளிதாஸ்' படப்பிடிப்பு சமீபத்தில் நடைபெற்றது.

காளியின் சிலை முன்புநின்று 'யார் தருவார் இந்த அரியாசனம்' என்று சிவாஜி பாடும் பாடல் காட்சியைப் பல கோணங்களில் படம்பிடித்தார் டைரக்டர் ஆர். ஆர். சந்திரன்.

படப்பிடிப்பு இடைவேளையின் போது தன்னைப்பார்க்க வந்திருந்த ஏ.பி. நாகராசனுடன் உரையாடிக் கொண்டிருந்த சிவாஜியின் கண்களில் நீர்மல்கியிருந்தது.

'என்ன ஒரே வருத்தமாக இருக்கிறீர்கள் போலிருக்கிறதே' என்று கேட்டார் ஏ. பி. என்.

'ஆமாம் சார்' காளியின் சந்நிதிக் காளியிடம் பக்தர்கள் பலி கொடுப்பதைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்படத்தயாரிப்புக்காக மூன்று சகதொழிலாளரின் உயிரே காளிக்குப் பலிபோய் விட்டது. இந்த 'செட்'டைப் பார்த்தவுடனேயே எனக்கு அந்த நினைவு வந்து விட்டது' என்று வருத்தத்துடன் கூறினர் கணேசன்.

சில நாட்களுக்கு முன் இந்த செட்டில் ஏற்பட்ட தீ விபத்தினையும் அதில் மூவர் மரணமடைந்ததையுமே சிவாஜி இவ்விதம் குறிப்பிட்டார்.

# 'சித்தி'

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி விடைக் 'கூப்பன்'

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | த் | 2 தி | ■ | 3 | | | 4 சி |
| | ■ | 5 | 6 | ய | - | ■ | |
| 7 | 8 ணி | ■ | ன | ■ | ■ | 9 வி | |
| ■ | 10 | 11 | ■ | 12 | 13 சி | | ■ |
| 14 அ | தி | | | ந் | | ■ | 15 நி |
| | ■ | ■ | ■ | 16 | | ம | |
| 17 | 18 ப | 19 | ■ | | | ■ | |
| 20 | | பா | | ■ | ■ | 21 | |

முழுப் பெயர்.......................................

முகவரி.......................................

.......................................

.......................................

.......................................

கையொப்பம்

### இடமிருந்து வலம்.

1. சிலோன் என்டர்டெயின்மென்சார் திரைப்பட ரசிகர்களுக்கு அளித்துள்ள இவ்வாண்டின் மிகச் சிறந்த படமிது.
3. 'சித்தி'யின் பெயர்.
5. இவர் இப்படத்தில் ஊமைப் பெண்ணாக நடிக்கிறார்.
7. இந்தக் குழந்தை நட்சத்திரம்கூட என்னமாதிரி நடித்திருக்கிறது 'சித்தியில்'!
9. சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் மற்றொரு வெற்றிப்படமான 'ஆனந்தி'யில் நடித்துள்ள கதாநாயகியை அவரின் கணவர் இப்படித்தான் அழைப்பார்.
10. இந்த மனிதர் 'சித்தியில்' மட்டுமல்ல, எந்தப்படத்திலும் கொடுமைக்காரர்தான்!
12. 'சித்தியில், இவர் பாடியுள்ளபாடல்கள் நெஞ்சைப் பிழிகின்றன.
14. 'சித்தி' படத்தைப்பார்த்தவர்கள் 'சித்தி ஒரு......படம்' என்று நிச்சயம் புகழுவார்கள்.
16. அறம் அலங்கோலப்பட்டு விட்டது.
17. 'சித்தி'யில், கல்வியின் பெருமையை விளக்க நாகேஷ் ஒரு கவிஞரின் பாடலை எடுத்துக் கூறுகிறாரல்லவா? அந்தக் கவிஞர் இங்கு உருமாறியிருக்கிறார்.
20. மாறியிருக்கும் இது தமிழ்ப்படங்களில் இப்பொழுது அதிகரித்து வருவதாக அறிஞர்கள் குறைப்படுகிறார்கள்.
21. சோர்வுள்ள உள்ளத்துக்கு இது மகிழ்ச்சியைக்கொடுக்கும்.

### மேலிருந்து கீழ்.

1. 'சித்தி' படத்தை தயாரித்த கம்பெனியின் பெயர்.
2. யாராலும் வெல்ல முடியாதது என்று கூறப்படும் இது இங்கே மாறிவிட்டது.
4. பிரபல தமிழ் நடிகர் ஒருவர்.
6. ......ரஞ்சகக் காட்சிகளுக்கு 'சித்தியில்' குறைவில்லை.
8. தலைகீழாகக் கிடக்கும் இது சிலரிடம் காணப் படுவதில்லை.
9. விலாங்கு குறைப்பட்டு விட்டது.
11. நாடகக் கணிகை.
12. 'சித்தியில்' நடித்துள்ள பழம்பெரும் நடிகையான இவர் பெயரைச் சுருக்கிக் கொண்டு காணப்படுகிறார்.
13. எத்தனை பெண்கள் இங்கே மாறுபட்டுக் கிடக்கும் இக்கொடுமையால் திருமணமின்றி வருந்துகிறார்கள்?
14. 'சித்தி' படத்தில் பத்மினியின் நடிப்பு......
15. 'சித்தியில் முத்துராமனின் காதலியாக தோன்றும் 'எங்கவீட்டுப் பெண்'ணான இவர் சுயரூபத்தில் தோன்றுகிறார்.
18. மூத்தாளின் குழந்தைகளிடம் பத்மினி காட்டும் இந்த உணர்ச்சி நம் கண்களை குளமாக்குகின்றது.
19. கீழிருந்து மேலாக வாசித்தால் அரைவாசியாகும்.

**முடிவு திகதி (25—8—66)**

# ஒரு மொழிக் கோஷம் . . .

*(6-ம் பக்கத் தொடர்ச்சி)*

Estate எனப்படும் இடம் இருக்கிறது இலதைப் போல ஒவ்வொரு மாகாணத்திலும் அதாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படியான கைத்தொழிற் பேட்டைகள் நிறுவப்பட வேண்டும். இத்தகைய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவி நம் நாட்டு இளைஞர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும் இத்தகைய கைத்தொழில்களில் ஈடுபடும் இளைஞர்களுக்கு முதலில் ஆயிரம் ரூபாவோ இரண்டாயிரம் ரூபாவோ கொடுத்து உதவிக் கூட்டுறவு முறையிலும் அரசாங்கம் கைத்தொழில் ஆரம்பிப்பது நல்லது என்றே நான் நினைக்கிறேன். இப்படிச் செய்தால் தான் எங்கள் நாட்டின் வளத்தைப் பெருக்கலாம். எங்கள் நாட்டிலுள்ள இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கலாம்.

### உணவுற்பத்தியில் தன்னிறைவு

'உணவு உற்பத்தியைப் பற்றிப் பல கருத்துக்களை நாம் சொல்லி இருக்கிறோம். இந்த அரசாங்கம் உப உணவு உற்பத்தியில் கவனம் செலுத்துவது ஒரு முறையான, சரியான போக்கு என்று அதை நாம் ஆதரிக்கிறோம். உணவு உற்பத்தியால் தன்னிறைவு பெற வேண்டியது எங்களுடைய நாட்டின் கடமை. எங்கள் உணவுக்காகப் பணத்தை வெளி நாடுகளில் செலவிடுவது நல்லதல்ல. இந்தப் பணத்தை, உணவுத் துறையில் தன்னிறைவு காண்பதற்காக அபிவிருத்தித் திட்டங்களில் உபயோகிக்கலாம். படிப்படியாக, வெளிநாடுகளிலிருந்து உப உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் குறைத்து, உப உணவு உற்பத்தியை எங்கள் நாட்டிலே அதிகரிக்கச் செய்ய வேண்டும். குடியேற்றத் திட்டங்களிலே, முதன் முதலாக உப உணவு உற்பத்திக் கொள்கைதான் அமுலிலிருக்கின்றது என்பதை அறிந்து நாங்கள் சந்தோஷப்படுகிறோம். உப உணவு உற்பத்தி பற்றி இன்னுமொரு கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன்.

### நீர்ப்பாசனம்

'சிறு நீர்ப்பாசனத்திட்டங்களோ பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களோ உப உணவு உற்பத்திக்கு உகந்ததாக இருக்கா. சில வேளை, அவற்றை ஏற்படுத்தும் செலவு ஒப்பு நோக்கும் நேரத்தில் மிகக் கூடுதலாக இருக்கும். நீரைத் தனவேட்டத்திலே விடாமல் இயந்திரம் மூலம் பெற்று நீர்ப்பாசனம் செய்தால் சில விஷயங்களில் செலவு குறைவாக இருக்கும் என்பதை நிபுணர்கள் எடுத்துச் சொல்வார்கள். இதை ஆராய்ந்து அதன்படி இயங்கினுல், தன்னோட்டத்திலே நீரைப்பெறுவதிலும் பார்க்க இயந்திர மூலம் நீரைப் பெற்றுச் செய்யும் நீர்ப்பாசனத்தில் செலவு குறைவு என்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

### கள்ளக்குடியேற்றத்தை எதிர்ப்போம்

'இச்சபையிலே சில கௌரவ அங்கத்தவர்கள் எழுப்பிய சில கருத்துக்களுக்கு நான் மறுமொழி சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அரசாங்கத்தை, நடத்த முடியாமல் ஏதோ தமிழரசுக் கட்சியின் சொல்லைக்கேட்டு இந்த அரசாங்கம் நடக்கிறதென்று கௌரவ நண்பரொருவர் கூறினார். இதற்கு நாட்டு மக்களிடையே இருக்கின்ற அபிப்பிராயமும், நாட்டு மக்களிடையே நிலவுகின்ற ஒற்றுமையும், நல்லெண்ணமும், போதிய பதிலாக இருக்கின்றது. ஆனால் எங்களைப் பொறுத்த மட்டிலே, நாங்கள் இந்தத் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தது, நாடு மீண்டும் ஜனநாயக முறையிலே இயங்கும், இந்நாட்டின் அரசாங்கம் தொடர்ந்து ஜனநாயக உரிமைகளை சகல மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் அளிக்கும், மனித அடிப்படை உரிமைகள் தமிழ் பேசும் மக்களுக்கும் கிடைக்கும் என்ற அடிப்படையிலே தான்; அதற்காகவே சேர்ந்து இயங்குகிறோம் இப்படி இயங்கும் பொழுது, இந்த அரசாங்கத்தைக் கள்ளத்தோணிகளே ஆதரிக்கிறார்கள் என்ற கருத்துப்படப் பேசியது மிகவும் தவறான கருத்தாகும்: தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையிலே கள்ளத்தோணிகளை, கள்ளமாகக் குடியேறுகின்றவர்களை நாங்கள் வரவேற்க மாட்டோம் என்று உங்களுக்குத் திட்டமாகச் சொல்ல விரும்புகிறோம் இந்தியாவின் தெற்குப் பகுதியிலே தமிழ் பேசும் மக்கள் இருக்கிறார்கள். இலங்கையின் வடக்குப் பகுதியிலே, கிழக்கிலே, மத்தியிலே தமிழ் பேசும் மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஏதோ சேர்ந்து விடுவார்களோ என்ற வீண் பயத்தினுல் எழுந்த கருத்துத்தான் இது. வேடிக்கையானது இது உங்கள் உண்மையான நிலையாக மனமறிந்த கருத்தாக எனக்குத் தெரியவில்லை.

### சுவிட்சர்லாந்தைப் பாருங்கள்

'இதற்கு உதாரணமாக அவர்களுக்கு நான் என்ன சொல்ல வேண்டுமென்றால் இரண்டாவது மகா யுத்தத்திலே நடந்ததைக் கூறலாம். அந்த யுத்தத்திலே ஜெர்மனியரும், பிரஞ்சுக்காரர்களும், இத்தாலியரும் ஒருவரை ஒருவர் கொன்று குவித்தார்கள். ஆனால், சுவிற்சர்லாந்திலே இருந்த பிரெஞ்சுக்காரர், ஜெர்மனியர், இத்தாலியர் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். எங்களைப் பொறுத்தமட்டிலே அரசியல் ரீதியிலே எங்களுக்கும் இந்தியாவிலே இருக்கும் எங்களைப் போன்ற தமிழ் பேசும் மக்களுக்கிடையே எதுவித தொடர்பும் இல்லை. இங்கிருக்கும் பௌத்தர்களுக்குக் கலாசார, சமயத் துறையிலே இந்தியாவுடன் எவ்விதம் தொடர்பு இருக்கின்றதோ அதுபோல் மொழி காரணமாக, சமயம் காரணமாக எங்களுக்கும் அவர்களுடன் தொடர்பு இருக்கின்றதே தவிர வேறு வகையில் எங்களுக்கும் இந்தியாவிலே இருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதை வற்புறுத்த விரும்புகின்றேன்.

'நாம் இந்நாட்டு மக்கள் என்பதையும், ஒரு காலத்திலே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே போர் மூண்டாற்கூட நாம் இலங்கைக்காகத்தான் போராடு

# போருக்கு அணியாக வேண்டும்

"அண்ணல்"


காருக்குள் நீராகி
கனிவுக்குள் தெளிவாகி
நீருக்குள் குளிராகி
நிலவுக் குட்சுடராகி
பாருக்குட் பயனாகிப்
படைத்தோனின் அடிமேவி
போருக்கு அணியாக வேண்டும்—அறப்
போருக்கு அணியாக வேண்டும்.

மலருக்குள் மணமாகி
மணத்தோடு தேனாகி
உலகுக்குள் ஒளியாகி
இருளுக்குப் பகையாகி
பலருக்கும் நலமாகி
படைத்தோனின் அடிமேவிப்
போருக்கு அணியாக வேண்டும்—அறப்
போருக்கு அணியாக வேண்டும்—

குயிலுக்குட் குரலாகி
குதிரைக்குள் விரைவாகி
மயிலுக்குள் நடமாகி
மணியுக்குட் சுடராகி
பயிருக்கு மழையாகிப்
படைத்தோனின் அடிமேவி
போருக்கு அணியாக வேண்டும்—அறப்
போருக்கு அணியாக வேண்டும்.

காற்றுக்குட் சுகமாகி
கனிகளுக் கினிதாகி
போற்றற்கு உரித்தான
புடைத்தங்க எழிலாகி
ஊற்றுக்குள் உயிராகி
ஒப்பற்றான் அடிமேவிப்
போருக்கு அணியாக வேண்டும்—அறப்
போருக்கு அணியாக வேண்டும்.

காட்டுக்குள் நிழலாகிக்
கடலுக்குள் முத்தாகி
ஏட்டுக்குள் சுவையாகி
இமைகட்குள் மணியாகி
கேட்டுக்குப் புலியாகி
கருணைப் பொன் அடிமேவிப்
போருக்கு அணியாக வேண்டும்—அறப்
போருக்கு அணியாக வேண்டும்.



கொழும்பிலுள்ள ஜே. பி. பிரசுர நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் திரு. மு. சிவலிங்கம் பி. எஸ். சி. அவர்களுக்கும் செல்வி கு. திலகவதிக்கும் அனுராதபுரம் கதிரேசன் கோயிலில் அண்மையில் திருமணம் நடைபெற்றது.

# அரசாங்க ஊழியர்களே!....

*(11-ம் பக்கத் தொடர்ச்சி)*

வது. இரண்டாவது நாடு முழுவதும் ஆயிரம் கைத்தறி நிலையங்களை நிறுவ இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை அரசாங்கத்தின் இந்த நல்ல பணிகளை எவரும் பாராட்டக் கடமைப் பட்டவர்கள்.

### மீன்பிடி

'அடுத்தாக மீன்பிடித் தொழிலைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இன்று பெருந்தொகையாக மீன் பிடிக்கப்படுகின்றது. சென்ற அரசாங்கம் மீன் பிடித் தொழிலை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விருத்தி செய்ய எவ்வித முயற்சியும் செய்யவில்லை. வடக்கு கிழக்கு மாகாண மீன்பிடிகாரர்களுக்குப் போதிய வாய்ப்புக்களை அளிக்கவில்லை. இன்று வடக்கு, கிழக்கு மாகாண மீன்பிடிகாரர்கள் போதிய மீன்பிடி வலைகள் இன்றித் தவிக்கிறார்கள். அவர்கள் தாங்கள் பிடிக்கும் மீனைச் சந்தைப்படுத்த முடியாது தவிப்பதை நாம் காணலாம். இந்த நாட்டில் மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதிலகூடச் சென்ற அரசாங்கம் பாரபட்சம் காட்டியது. கடந்த ஆட்சிக் காலத்தில் தென்னிலங்கையில் பல மீன்பிடித் துறைமுகங்கள் நிறுவப்பட்டன. ஆனால் வட பகுதியில் ஒரு மீன்பிடித் துறைமுகந்தானும் அமைக்கப்படவில்லை.

'இத்தகைய குறைகளை எல்லாம் நிறைவு செய்யத் தேசிய அரசாங்கம் இன்று முயன்று கொண்டிருக்கின்றது. கிளிநொச்சிப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பகுதியிலும் இன்று கடல் அட்டைகள் பிடிக்கப் பட்டு சீனுவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனுல் ஏராளமான வெளிநாட்டுச் செலவாணியை நாம் பெறக் கூடியதாக இருக்கிறது. இத்துறைக்கு அரசாங்கம் போதிய ஊக்கம் அளிக்கவில்லை. இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் பல இடர்ப்பாடுகளை அடைகின்றனர்.

'ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் என்னையே ஒரு கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த அரசாங்க ஊழியர்கள் சிவர் மக்களுக்குச் சேவை செய்ய இருக்கிறார்களா அல்லது மக்கள் அவர்களுக்குச் சேவை செய்யவேண்டியிருக்கிறதா என்பதே அக்கேள்வி. சென்ற 8, 9 ஆண்டுகளாக இந்நாட்டிலே நிகழ்ந்த ஊழல்களை அகற்றுவதற்கு அரசாங்கம் விரைவாக முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. அதனை கூடிய விரைவாகச் செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

### சிங்களச் சட்டம்

'சிங்களம் மட்டும் சட்டத்தினுல், தமிழ் இனத்திற்கும் சிங்கள இனத்திற்கு மிடையில் ஏற்பட்ட விரோதங்கள் எல்லாம் மாறி, இன்று இரு இனத்தவர்களும் ஒரு இன மக்களாக-சகோதரர்களாக—வாழத்தக்க ஒரு நிலை உருவாக்கப்பட்டுவருகிறது என்றாலும் எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கு, அதிலும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்னும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. தமிழ் மொழி விசேட சட்ட விதிகள் நிறைவேற்றப்பட்டுப் பல மாதங்கள் ஆகியும் இப்பொழுதும் சிங்களத்திலேயே அலுவலகங்களிலிருந்து எங்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இதைப்பற்றிப் பின்னர் அந்தந்த அமைச்சர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் நாம் எழுதும் பொழுதெல்லாம் எங்களுடைய நேரமும் வீணுகி அவ்வலுவலகங்களிலே பணிபுரிகின்றவர்களுடைய நேரமும் வீணுகிப் போகின்றது.

'எனவே இந்நாட்டிலே தமிழுக்கும் ஒரு இடம் கொடுத்த தேசிய அரசாங்கத்தின் கீழே பணிபுரிகின்ற தீவிர சிங்கள ஊழியர்களுக்கு இச்சபையிலிருந்து நான் விடுகின்ற வேண்டுகோள் என்னவென்றால் சிங்களம் மட்டும் சட்டத்தை மீண்டும் மீண்டும் புகுத்தி குழப்பத்தை விளைக்காதீர்கள், நல்ல முறையிலே தொண்டாற்றுங்கள் என்பது தான் ஒரு மொழியை இன்னொரு மொழி பேசுபவர் மீது திணிப்பதென்ற மனப்பான்மையில்லாமல் அரசாங்க ஊழியர்கள் இரண்டு இனங்களையும் சமமாக மதித்து நல்ல முறையிலே நடக்க வேண்டும்.

(From the column ending "என்னையே ஒரு கேள்வி கேட்") வோம் என்பதையும் அவர்களுக்கு உணர்த்தி, இப்படிப்பட்ட பிழையான கருத்துக்களைக் கொள்ள வேண்டாமென்றும் மக்களிடம் இவ்வித பிழையான கருத்துக்களை வளர்க்க வேண்டாம் என்றும் மிகத் தாழ்மையாக எதிர்க்கட்சியினரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

# அலைகடல்தான் ஓயாதோ?

"செங்கை ஆழியான்"

புகைவளையங்கள் சுழன்று சுழன்று அழிந்துகொண்டிருந்தன. திரளாகக் குவிந்து வெளிவந்து பிளந்து சிதைகின்ற புகைத் திரளை நாகலிங்கத்தின் கண்கள் அர்த்தமின்றி நோக்கின. அந்த இரண்டாம் வகுப்புப் பெட்டிக்குள் அவன் ஏறி அமர்ந்ததிலிருந்து எவருமே ஏறவில்லை. சுற்றுடல் ஏகாந்தமாக அமையவே, அவன் நினைவுகள் பாசிபடர்ந்து தேங்கிவிட்ட அவன் வாழ்வின், கழிந்துபோன நினைவுகளைச் சுற்றி சுழன்று படர்ந்தன.

விரைந்து கொண்டிருந்த மெயில்வண்டி ஏனோ மெதுவாக ஊரத் தொடங்கியது. சிறிது ஊர்ந்து பின் நிலைத்து நின்றே விட்டது. சற்றுக் காலக்கழிவின் பின்பே மெயில் அசையாது நின்றது அவன் மனதில் உறைத்தது. யன்னலில் நாடி பதித்து வெளியே விழிகளைப் பரப்பினான்:

பரந்து விரிந்து கிடந்த வயல்வெளிகள். கரும் போர்வையாக அலையெறிந்து நின்ற பசும் பயிர்கள், கரும் போர்வையில் உள்ள பொத்தல்கள் போன்று, அடர்ந்துபயிர் வளர இடைச்சிறு நிலங்கள். அந்த இடைச்சிறு நிலங்களில் தேங்கிநின்ற நீர், சன்னமான நிலவின் கதிர்களின் பிரதிபலிப்பால் வெண்மண்டையாகப் பளபளத்தது. வயல் வெளிகளுக்கு அப்பால் முதுகெலும்பாக அமைந்திருந்த வீதி.

அவ்வீதியின் இடதுகரையில் மெலிந்து, உயர்ந்து வளர்ந்திருந்த தனித்த மரமொன்று ஏகாங்கியாக நின்றது.

அத்தனித்த மரத்தில் அவன் கண்கள் குத்திட்டு நின்றன. அம்மரத்தின் உச்சியை உறைவிடமாகக் கொண்ட பறவையொன்று, ஒருமுறை மேலெழுந்துவிட்டு, திரும்பவும் மரத்தினுள் மறைந்ததும் அவனுக்குத் தெரிந்தது.

மெயில் புறப்பட்டு விரையும்வரை அவன் பார்வை அம்மரத்திலேயே பதிந்திருந்தது.

தன் கலியாணத்திற்காக மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மெயிலில் பயணம்செய்த அந்நாள் திரும்பவும் மனக்குகையில் எழுந்தது.

அவனுடன் தன்வாழ்வைப் பிணைத்துக்கொள்ள இருப்பவளைப்பற்றியே அவன் அன்றிரவு முழுவதும் யோசித்தான். அவளை அவனுக்குத் தெரியாது. எப்படி இருப்பாள்?

அண்ணர் ஒழுங்கு செய்த திருமணம். பெற்றோர் விருப்பத்துடன் ஒழுங்கு செய்ததுதான்.

அவர்கள் அவனுக்கு நல்லதே செய்வார்கள்.

ஈஸ்வரிக்காகத்தான் அவன் மணம் செய்துகொள்ளப்போகின்றான். அவளுக்காக எதைத்தான் செய்யக் கூடாது? ஈஸ்வரிக்குத்தான் அவனில் எவ்வளவு அன்பு.

கோயில் வீதியில் கிளித்தட்டு விளையாடிய போதுதான் அது நிகழ்ந்தது. முதல் தட்டை அவன் பாதுகாத்து நின்றபோது, பக்கத்து வேலியோரம் வளர்ந்து நின்ற தென்னைமரத்தில் செத்துக் கிடந்த ஒல்லித் தேங்காய் ஒன்று, பிடிப்பிழந்து அவன் வலது பக்க மண்டையைப் பலமாகத் தாக்கியதோடு, தோளையும் வேதனைப்படுத்திவிட்டது.

அவன் விரிட்டபடி மண்டையைப் பிடித்துக்கொண்டான். அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும்; அவளது கண்கள் இருளும்போது பரம் இல்லை அவனைத் தாங்கிக் கொண்டது மட்டும் நினைவில் இருந்தது.

அவனுக்குச் சுய அறிவு வந்தபோது அவன் வீட்டிலிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஈஸ்வரி அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள்.

அவன் கண் விழித்ததைக் கண்ட அவள், 'அண்ணை' என்று கூவியபடி விம்மிவிம்மி அழுதாள்; 'நல்லா வலிக்குதா, சின்னண்ணை?'

அவன் வேதனையோடு ஈஸ்வரியைப் பார்த்தான். அவள் முகம் வீங்கிக் கிடந்தது.

'தங்கச்சி......'

'தேங்காய் உச்சியிலைவிழுந்திருந்தால் நீங்கள் செத்திருப்பியளாம், அண்ணை! நீங்க 'இல்லாமல் பிறகு இங்கை நாங்கள் ஏன் இருப்பான்...' அவள் கேவிக் கேவி அழுதாள்.

அத்தகைய ஈஸ்வரிக்காக அவன் மணம்செய்து கொள்ளப் போகிறான்.

செல்லப்பர் முதனாள் கூறியவை நினைவில் எழுந்தன!

'தம்பி, மாற்றுக் கலியாணம் அவ்வளவு நல்லதல்ல. அப்படி நடந்தவற்றில் எப்பவும் ஒரு குடும்பம் நல்லா இருப்பதில்லை...அனுபவத்தில் கண்டிருக்கிறேன. மறுகா யோசியுங்கோ......'

அவன் சிரித்தான்.

'தங்கச்சி, நல்லா விருந்தால் போதும்!'

செல்லப்பரின் மனைவியும் அதையே கூறினார்:

'தம்பி, பொம்பிளையை ஒருக்காப் பார்த்திட்டு ஓமென்றது நல்லது .....'

அவனது இதயத்தின் ஒரு மூலை படபடத்தது.

'இல்லை, அம்மா! ஏதோ பெரிய அழகு சுந்தரி எனக்கு மனைவியாக வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அடக்கமாய், எனக்கேற்ற மெல்லிய ஒரு பெண்ணாய் இருந்தால் போதும்... ...சுமாரான பெண்ணே போதும். அண்ணர் பார்த்து ஒழுங்கு செய்திருக்கிறார்... ...நல்லதாகவே செய்திருப்பார்......'

பரிமளாவின் அம்மா அவனை வியப்போடு பார்த்தார்!

'நீர் புதுமாதிரியானவர்.'

பரிமளாவிற்கு அவன் யாழ்ப்பாணத்திற்குப் புறப்படும்போதுதான் விஷயம் தெரிந்தது. மெதுவாக அவன் அறைக்கு வந்து நிலைக்கதவைப் பலமாகப் பிடித்தபடி நின்று அவனைப் பார்த்தாள்.

அவள் ஏன் பெருமூச்சுவிட வேண்டும்?

உடலில் மெல்லிய நடுக்கம்; முகம்வெளிறிச் சோபை இழந்து கிடந்தது.

'மாஸ்ரர்!'—அழைப்பில் ஏன் இவ்வளவு பலவீனம்?

உடுப்பை அடுக்கியபடியே, 'என்ன, பரிமளா?' என்று கேட்டான், திரும்பிப்பாராமலேயே.

'நீங்க யாழ்ப்பாணம் போறியளா?'

'ஓம்... ஆர் சொன்னது?'

'அம்மா சொன்னவ. என்னத்துக்குப் போறயள்......!' பரிமளாவிற்குத் தெரியாது ஏன்கேட்டேன் என்று. விடை தெரிந்தும் வினவினள்.

'உனக்குத் தெரியாதா?'

'தெரியும் ...'

அவன் சிரித்தபடி திரும்பினான். அவள் அவனை நிமிர்ந்து நோக்கினள்.

'பரிமளா, என்ன இது?'

'என்ன...?'

'ஏன் அழுகிறாய்?'

'அழுகிறேனா? எனக்குச் சுகமில்லை...'

அவள் சடாரெனக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். அவன் ஒரு நிமிடம் அவளைப்பார்த்தபடி நின்றான். அவள் யன்னலிற்கு வெளியே நின்ற கொய்யா மரத்தை வெறித்துப் பார்த்தாள். நல்ல பெண் இவள்.

'சுகமில்லை என்று அம்மாவிற்குச் சொன்னயா?'

சொல்லக் கூடியதா, இது? பதினைந்து வயதுப் பெண்ணுக்கு இப்படி ஓர் எண்ணமென்று அம்மா நகைக்காவா? அவள் எப்படிக் கூறுவாள்.

'மருந்து குடித்தாயா, பரிமளா?'

மருந்தால் தீரக்கூடியதா, இது?

அவள் பேசாது நின்றாள். வெளியே யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது காலம் கடந்துவிட்டது. அவள் கேட்டாள்!

'மறுகா வருவியளா?'

செல்லப்பர் அறைக்குள் வந்தார். அவள் விலகி நின்றாள்.

'எல்லாம் சரியா, தம்பி?'

அவன் புறப்படும்போது எல்லோரிடமும் விடைபெற்றான்.

'போய்வாங்க...' என்றாள், பரிமளா.

மெயில் இருளைப்பாழ்படுத்தியபடி விரைந்தது. அன்றுதான் அவன் ஒரு கேள்வியை மனதில் எழுப்பினான்! 'பரிமளா என்ற அச்சிறுமி என்னைக் காதலித்தாளோ?'

கேள்வி ஏன் எழுந்தது? இவ்வளவு காலமும் எழாத கேள்வி ஏன் எழுந்தது? உள்ளத்தின் ஒரு மூலை பொய் கூறுதா?

அவள் அவனோடு பழகிய விதங்கள் எல்லாம் நினைவிற்கு வந்தன. கல்முனைக் கடற்கரையில் ஒருநாள்—

சாய்கதிர்கள் ஒடுங்கிக்கொண்டிருந்தன. நிறத்திட்டுகள் அடிவானில் வர்ணமிடும் போதில் வெண்மணலில் அவர்கள் நடந்துகொண்டிருந்தார்கள்.

செல்லப்பர்; திலகா; பரிமளா; அவன்.

திலகா கடல் நீரோடி அலசிக்கொண்டு வந்தாள். செல்லப்பர் சிறிது தூரம் நடந்துவிட்டு மணலில் உட்கார்ந்துவிட்டார். நாகலிங்கத்தோடு பரிமளா இணைந்து நடந்தாள்.

'மாஸ்ரர்!'

'என்ன பரிமளா?'

'கடற்கரை எவ்வளவு அழகாயிருக்கு......'

'எதுவுமே அழகுதான்.'

'நானுமா?...'

வியப்போடு அவளைப் பார்த்தான். பின் கலகலவென நகைத்தான்.

'நீ அழகிதான், பரிமாளா! பொதுநிறமென்றாலும் உன்னிலுள்ள கவர்ச்சி எவருக்குமேவராது!'... உண்மையில் பார்க்கப்போனால் தாய்மையோடு எவ்வித கல்மிஷமின்றியே இவற்றை அவன் கூறினான்.

மேலும் சிறிது தூரம்நடந்தார்கள்.

'மாஸ்ரர்......'

'......ம்......'

'உங்களோடு கைகோத்துக் கொண்டு இக் கடற்கரையில் ஓடவேண்டும்போலிருக்கு...'

'நீ சிறுமி ஓடுவாய்! என்னால் முடியுமோ?'

'நீங்க என்ன கிழவரா?'

இவற்றை எல்லாம் கொண்டு அவளை அளவிடப் பார்த்தான், நாகலிங்கம்.

'சாய்...அப்படி ஒன்றுமிராது...பதினைந்து வயதுச் சிறுமி அவள். இருபத்தெட்டு வயது ஆடவன் நான்.'

இருக்கையைவிட்டுஎழுந்து வெளியே வந்து, கதவைப் பிடித்தபடி இருளைக் கண்களால் ஊடுருவினான், அவன். மரங்களும் புதர்களும் மாறி மாறி விரைந்து மறைந்தன. வண்டுகளின் சில்லென்ற இரைச்சல்.

இன்னொரு நினைவுப் பருக்கை.

அவன் ஒருநாள் கூறினான்!

'பரிமளா, நீயும் திலகாவும் என் தங்கச்சிகள் போல.'

அவள் உடன் கூறினாள்!

'எனக்கு அண்ணனென்றால் பிடிக்காது!'

பரிமளா அவனுக்குஎதைக் கூற விரும்பினாள்? நிச்சயமாக அப்படி இருக்காது என்று அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டான். இன்னொரு சிறு சம்பவமும் கூடவே எழுந்தது.

இனிய ஒரு மாலைப் பொழுது. அறையில் இருந்து அவன் ஏதோ படித்துக் கொண்டிருக்கும்போது, பரிமளா அங்கு வந்தாள்.

'மாஸ்ரர்...இதென்ன பழம் தெரியுமா?'

—மளமளப்பான அவள் நீண்ட கரத்தில் மஞ்சள் நிறப்பழமொன்று. அப்பிளின் வடிவத்தில் இருந்தது.

'தெரியவில்லை, பரிமளா!'

'இதுக்குப்பேர்இலாவலு... ...உங்களுக்கு ஒரு துண்டு தரட்டுமா?...' என்ற அவள் அவனது சம்மதத்தைப்பெறாமலேயே அப்பழத்தைப் பிய்த்தாள். அது மாப்பொருளின் தன்மையுடன் பிளந்து கொண்டது.

ஒரு துண்டை அவன் வாங்கிக்கொண்டான். அதன் மணமே அவனுக்குப் பிடிக்கவில்லை. முகத்தைச் சுழித்துக் கொண்டான்.

'எனக்கு வேண்டாம், பரிமளா! ஏதோபோல இருக்கு...'

'அப்ப எனக்கும் வேண்டாம்...' என்றபடி யன்னலினூடாகத் தன் கையிலிருந்த எஞ்சிய பழத்தை அவள் வெளியே வீசிவிட்டாள்; அது மண்ணில் குளித்தது. அவன் வியப்போடு அவளை நிமிர்ந்து பார்த்தது இன்றும் நினைவிலிருந்தது.

ஏன் பரிமளா அப்படிச் செய்தாள்?

இன்னொரு நினைவின் எச்சம்.

பரிமளாவும் திலகாவும் சில வேளைகளில் சண்டையிடுவார்கள். திலகா சரியான வாய்க்காரி; பரிமளாவும் ஒன்றும் குறைந்தவளல்லள். சண்டையில் தோல்விகண்ட திலகா கடைசி ஆயுதத்தை உபயோகித்தாள்.

'நீ கறுப்பி!'

—பரிமளா தோல்வியுற்றுச் சோர்ந்தாள். அவளால் பொறுக்க முடியவில்லை,

'நீ பெரிய திறமோ? பூனை முழி...'

'கறுப்பி...'

'பூனை முழி...'

கூச்சல் பலத்தது. அம்மா வந்துவிட்டாள். இருவரும் பிரிந்து விட்டார்கள்.

ஏதோ படித்துக்கொண்டிருந்த அவன் வாசலில் நிழலாடியதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தான்.

'என்ன, பரிமளா?'

அவள் சோர்ந்து நின்றாள்.

'மாஸ்ரர், நான் கறுப்பா?'

அவனுக்கு ஏதோ போலிருந்தது. கறுப்பாகப் பெண்கள் இருக்கக்கூடாதா? உண்மையான அழகு கருநிறத்தில் தான் இருக்கிறது.

பரிமளா அவன் முன் நின்றாள். இந்தப் பெண்களுக்கு ஏன்தான் தாழ்வெண்ணமோ?

'யார் சொன்னது நீ, கறுப்பியெண்டு!'

'திலகா...'

'பரிமளா, நீ என்ன சிறுகுழந்தையாக இருக்கிறாயே? உண்மையில் திலகா சிவப்பி என்றாலும், இருவரில் அழகி நீதான்...'

'உண்மையாகவா...?'

அவள் விழிகளை மலர்த்திக் கேட்டாள்.

'நிச்சயமாக, பரிமளா?'

கதவோரத்தில் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த திலகா கூறினாள்!

'மாஸ்ரர், எப்போதும் பரிமளா பக்கத்தான்.'

அவனுதட்டில் குறுநகை கோடு கிழித்தது.

—மெயில்விரைந்துகொண்டிருந்தது.




'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7- 0
நிர்வாகி
சுதந்திரன்

# இப்பொழுது காட்சி தருகிறார்



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பளித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) சிறீகிருஷ்ணு (திருமலை)

தமிழின் சிறப்பு அதன் இனிமையிலே! மண்ணின் சிறப்பு அதன் வளமையிலே! பொன்னின் சிறப்பு அதன் தன்மையிலே!! ஆண்டவன் சிறப்போ அவரது அடியாரிடத்திலே! அத்தகைய அடியார்க்கு அடியாராய் விளங்கி திருமுருகன் அருள் வேண்டி திருப்புகழ் பாடிய

# அருணகிரிநாதர்

நடிகர்கள்: டி. எம். சௌந்தரராசன், எம். ஆர். ராதா, பி. எஸ். சரோஜா, மனோகர், சாரதா, லட்சுமிராஜம், மற்றும் பலர்.
டைரக்ஷன்: ராமண்ணு இசை: ஜி. ராமனுதன், டி. ஆர். பாப்பா வசனம்: சக்தி. கிருஷ்ணசாமி

● டி. எம். எஸ்ஸின் உள்ளத்தை உருக்கும் பாடல்களுக்கு ஒரு படம் 'அருணகிரிநாதர்'

---

# 4-வது சனத்திரள் வாரம்!



எம்பயர் (கொழும்பு) செல்லமகால் (கொழும்பு) வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருமலை) கிங்ஸ் (பதுளை)

சிவாஜிகணேசன், சாவித்திரி, தேவிகா, முத்துராமன்,
நாகேஷ், கே. பி. சுந்தராம்பாள், டி. ஆர். மகாலிங்கம்,
டி. எஸ். பாலையா, மனோரமா, ஜி. சகுந்தலா, சம்பந்தம்,
சாரங்கபாணி, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

# திருவிளையாடல்

(ஈஸ்ட்மன் கலர்)

சென்னையில் ஐந்து மாதங்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய சித்திரம்.

குறிப்பு: 50ம் அதற்கு மேற்பட்டவர்களும் அடங்கிய பாடசாலை மாணவக் குழுவினருக்கு எந்தவகுப்பிற்கும் ரூபா 1/10% விசேட சலுகையளிக்கப்படும். விபரங்களுக்கு எம்பயர் அல்லது செல்லமகால் தியேட்டர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கெயிட்டி திரையில் 8-வது வெற்றி வாரம்! "பூமாலை"
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி நடித்த

---



## 4-வது சனத்திரள் வாரம்!

திரைப்பட வரலாற்றிலே புதியதோர் சாதனை!
திரையிடப்பட்ட எல்லா படமாளிகைகளிலும் ஒரே சனத்திரள்!
இன்று நாட்டிலே காண்பிக்கப்படும் அதி உன்னதத் திரைப்படமென பார்த்தோர் அனைவருமே பாராட்டுகின்றனர்.
இன்றே உங்கள் குடும்பத்தோடு சென்று பார்த்து மகிழுங்கள்!
ஆற்றல்மிக்க ஒரு குடும்பப் பெண்ணின் இயல்பை ஆணித்தரமாக எடுத்துக் காட்டும் உயர்ந்த குடும்பச் சித்திரம்

சித்ரா புரொடக்சன்ஸாரின்

# சித்தி

திரைக்கதை வசனம்-டைரெக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
திரையுலகத் தாரகை பத்மினி
காதல் மன்னன் ஜெமினிகணேசன்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன். பாடல்கள்: கவியரசு கண்ணதாசன்.

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை)

ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) ஓடியன் (கண்டி) சிகிரி (பண்டாரவளை) லிபேர்ட்டி (ஹட்டன்)

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.